Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

**AXSHAYA CONSTRUCTION JAFFNA**
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 24 சனிக்கிழமை (07.06.2014) பக்கங்கள் 20 ஓசை -249

## தகவல் அறியும் உரிமையை பறிக்கிறார் வடக்கு முதல்வர்

(கொழும்பு)

வடபகுதி மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான தகவல் அறியும் உரிமையை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பறிக்க முயற்சித்து வருகிறார் என்று தெற்கிலிருந்து வெளிவரும் சிங்கள நாளிதழ் ஒன்று கண்டனம் தெரிவிக்கும் வகையில் தகவல் வெளியிட்டிருக்கிறது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றை மீறி இருப்பதாக மேற்படி சிங்கள ஊடகம் குற்றம் சுமத்தியுள்ளது.

தமது இல்லத்தில் செய்திகளை சேகரிக்கக்கூடாது என்று அண்மையில் முதலமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதன் மூலம் வடமாகாண மக்களின் தகவல் அறியும் உரிமையை அவர் மீறி இருப்பதாக குறித்த ஊடகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் தேர்தல்களின் வெற்றிக்காக ஊடகங்களை பெரிதும் பயன்படுத்திக் கொண்ட அவர், தற்போது அவற்றை புறக்கணித்து வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## கெற்பேலியில் ஏ.கே.47 துப்பாக்கிகள் மீட்பு

### இளைஞர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதி வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் அதனை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 22 வயது மதிக்கத்தக்க இளைஞரையும் கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

நேற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து படையினரின் உதவியுடன்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி ஆணைக்குழு கிழக்கில் நேற்று விசாரணை



### கண்ணீர் மல்க பலர் சாட்சியம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலகத்தில் காணாமற் போனோரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்றுக் காலை ஆரம்பமானது. இந்த அமர்வு இம்மாதம் 9 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

காணாமற் போனோரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி மக்ஸ்வல் பராக்கிரம பரணகம தலைமையில் இந்த அமர்வு நடைபெறுகின்றது.

இந்த அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை வரை மட்டக்களப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றில் முன்னாள் புலிகள்

(கொழும்பு)

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள் 140 பேர் நேற்று நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்தனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் மேற்படி 140 பேரும் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

நாடாளுமன்ற அமர்வின் ஆரம்ப நிகழ்வு முதல் சபையின் அனைத்து நடவடிக்கைகளையும் பார்வையிட்ட அவர்கள் காலி, அம்பாந்தோட்டை

19 ஆம் பக்கம் பார்க்க

## காலாவதியான பொருட்கள் விற்பனை யாழ். நகரில் இனி திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 110 வர்த்தகர்களுக்கு 5 இலட்சத்து 6 ஆயிரம் ரூபா தண்டப்பணம் நீதிமன்றினால் அறவிடப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 60 வர்த்தகர்கள் கடந்த இரு மாதங்களில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பாணின் நிறை குறைவு, பிஸ்கட், மருந்துப் பொருட்கள், வேறு உணவுப் பொருட்கள் என காலாவதியானவற்றினை வர்த்தகர்கள் விற்பனை செய்கின்றனர்.

இந்தப் பொருட்கள் பிரதான மற்றும் முக்கிய நகரங்களை அண்மித்த வியாபார நிலையங்களில் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது.

உற்பத்தி திகதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பன குறிப்பிடாமல் பொருட்களை சாதாரண பொதிகளில் பொதி செய்து விற்பனை செய்வதை தடைசெய்ய வேண்டும்.

இவ்வாறு காலாவதியாகும் திகதி குறிப்பிடாமல் பொருட்களை விற்பனை செய்வதனால் அந்த உணவுப் பொருட்களை பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச சபைக்கு புதிய தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு கீழுள்ள வலி. கிழக்கு பிரதேச சபைக்கு புதிய தவிசாளராக துரைசிங்கம் கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

தொங்கு நிலையில் இது வரை காலமும் இயங்கி வந்த மேற்படி பிரதேச சபைக்கே புதிய தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் முன்வைத்த 2014 ஆம் ஆண்டிற்கான வரவு,



செலவுத்திட்டம் இரண்டு தடவைகள் தோல்வியடைந்த பின்னர் அவர் தவிசாளர் பதவியிலிருந்து உள்ளூராட்சி சட்டத்திற்கமைவாக நீக்கப்பட்டார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## 117 வயது மூதாட்டி மரணம்



(கொழும்பு)

ஆசியாவிலேயே மிக வயதான பெண் என அழைக்கப்பட்ட முதியவர் தனது 117 ஆவது வயதில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

உக்கு அம்மா என அழைக்கப்பட்ட இவர் 1897 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி பிறந்த இவர் மாவனெல்ல, ஹேம்மாத்தகம பிரதேசத்தில் வசித்து வந்துள்ளார்.

இவருக்கு 7 பிள்ளைகளும் 98 பேரப்பிள்ளைகளும் உள்ளதுடன், இவரின் கணவர் 111 ஆவது வயதில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## விவசாய விதை உற்பத்திச்சட்டம் விவசாய அமைப்புகள் கண்டனம்

உத்தேசிக்கப்பட்டுள்ள விதைகள் சட்டம் விவசாயிகளின் பாரம்பரிய உரிமையை பறிப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சனத்தொகைப் பெருக்கம், பருவநிலை மாற்றங்கள் இப்படியான சவால்களை எதிர்கொண்டிருக்கின்ற உலக நாடுகளுக்கு விவசாயத்திற்குத் தேவையான விதைகளை விருத்தி செய்வதும் பாதுகாப்பதும் இன்று பெரும் பிரச்சினைக்குரிய விடயமாகியுள்ளது.

விவசாய விதைகளைப் பாதுகாப்பதற்கான உரிமை தொடர்பில் விவசாய திணைக்களத்தின் இயக்குநருக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் புதிய விதைகள் சட்டத்தை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் வணிக நிறுவனங்கள் விற்கின்ற விதைகள் மூலம் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காவிட்டால், அந்த நிறுவனங்களை அதற்குப் பொறுப்பாக்குவதே இந்தப் புதிய சட்டத்தின் நோக்கம் என்று விவசாய அமைச்சின் விவசாய தொழில்நுட்பம் தொடர்பான மேலதிகச் செயலாளர் டி.பி.டீ. விஜேரட்ன தெரிவித்தார்.

ஆனால், விவசாய சங்கங்களோ இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரவேகூடாது என்று

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே
மாகாணமட்ட
பெருவிளையாட்டு விழா
விறுவிறுப்பான செய்திகள்

# சந்தேகத்தில் மூவர் கைது

தனிமையில் இருந்த வயோதிப மாதுவை துணியால் நெரித்து கொலை செய்த 3 பேரை சந்தேகத்தின் பேரில் யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அரியாலை இளையதம்பி வீதியைச் சேர்ந்த சோமசுந்தரம் இராசம்மா (வயது - 72) என்ற 4 பிள்ளைகளின் தயார் உயிரிழந்தார். கடந்த மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொட்டடி மற்றும் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (25)


## கூறுவிலை கோரல்

## பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபைக்கு அம்பாறை மாவட்டத்தில் கைப்பணிப்பயிற்சி நிலைய கட்டடம் அமைப்பதற்கான கூறு விலை கோரப்படுகின்றது.

| இல | விபரம் | அண்ணளவான கணிப்பீட்டுப் பெறுமதி (வரி உள்ளடங்கலாக) |
|---|---|---|
| 01 | அம்பாறை மாவட்டத்தில் நாவிதன் வெளியில் அமையவுள்ள பனம் கைப் பணி நிலையைத்திற்கான 31'8"ஓ21'33" விஸ்தீரணம் உடைய கட்டடம் | 2.00 Mn |

மேற்படி கட்டடத்திற்கான கூறுவிலைப் பத்திரங்களை தேசிய வீடமைப்புச் செயலகம், 1 ஆம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைக்காரியாலயத்திலோ அல்லது இல 26, தேசிய வீடமைப்புச் செயலகத்தில் அமைந்துள்ள கல்முனை பிராந்திய காரியாலயத்திலோ மீளளிக்கப்படாத தொகையாக ரூபா 1000.00 செலுத்திப் பெற்று பூர்த்தி செய்து 20.06.2014 ஆம் திகதிக்கு முன்பாக பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக்காரியாலயத்திற்கு பதிவுத் தபாலிலோ. அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். 23.06.2014 காலை 10 மணிக்கு கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும்.

குறிப்பு ஒப்பந்தகாரர் ICTAD பதிவு C8 அல்லது அதிலும் கூடியது.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
1 ஆம் மாடி, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (C/3701)


# மறைத்து வைக்கப்பட்டிருந்த அரிமரங்கள் அரியாலையில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மரப் பலகைகளை யாழ்.பொலிஸார் அரியாலைப் பகுதியில் மீட்டுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கமைய சட்டவிரோத செயல் தடுப்புப் பொலிஸ் பரிசோதகர் டி.எம். ஜெயதிலக தலைமையிலான 7 பேர் அடங்கிய பொலிஸ் குழுவினர் நேற்று அரியாலைப் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது முதிரை, பாலை, மரத்தீராந்திகள் வீடு ஒன்றில் மறைத்துவைக்கப் பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதுடன், அவற்றை பதுக்கி வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட சட்டவிரோத மரப்பலகைகளின் பெறுமதி ஏறக்குறைய மூன்றரை இலட்சம் ரூபா வரையில் வரும் என பரிசோதகர் டி.எம்.ஜெயதிலக தெரிவித்தார்.

விற்பனை நோக்கிலேயே இம்மரப்பலகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஏகாதசித் தீர்த்தம்

(குருநகர்)

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்த்தானத்தில் நாளை மறு தினம் திங்கட்கிழமை ஏகாதசித் தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9 மணிக்கு சமய நிகழ்வுகள் இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீ நாகவரத நாராயணர் ஸ்ரீதேவி, பூமாதேவி சமேதராய் அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12 மணிக்கு அடியவருக்கான மகேஸ்வரபூசை நடைபெறும். (68)





## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088. (C/3395)

□ □ □ □ □

### வேலைவாய்ப்பு

விமான நிலையத்தில் (தனியார்) நிரந்தரமான வேலைவாய்ப்பு 6ஆம் தரம் O/L, A/L படித்த 18-50 வயதான ஆண், பெண் அனைவருக்கும் சாப்பாடு, பொருட்கள் பெக்கிங், சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர் ஆகிய பகுதிக்கு உடனடியாக ஊழியர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி பயிற்சியுடன் வழங்கப்படும். சம்பளம் 18,000/- - 35,000/-

□ □ □ □ □

நம்பிக்கை எங்களுடைய சான்றிதழ் நிரந்தரமான தொழில் ஐஸ்கிறீம், கொக்லேட், டொபி, கிளவுஸ் ஆகிய நூர் உற்பத்திக்கு பெக்கிங், ஸ்டோர்ஸ், செக்கிங் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. வருகின்ற தினம் சாப்பாடு இலவசமாக வழங்கப்படும். சம்பளம் 25,000/- 35,000/- வரை நண்பர்கள், தம்பதிகள் குழுக்களாக இணைந்து கொள்ளலாம். தொடர்புக்கு: 0710854068

□ □ □ □ □

நிரந்தரமான சம்பளத்துக்கு (தனியார்) கப்பல் வேலைக்க 18 - 55 வரையான ஆண் தேவை. சம்பளம் 25,000 - 30,000 வரை சாப்பாடு, தங்குமிட பயிற்சி வழங்கப்படும். (077 596 4299)


# கடலுக்குள் கவிழ்ந்தது வாகனம்



யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதி துரித கதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் நிலையில் நேற்று மாலை அல்லைப்பிட்டிக்கும் மண்டைதீவுச் சந்திக்கும் இடையில் நீர்ப்பாசன திணைக்களத்திற்க சொந்தமான வாகனம் ஒன்று தடம்புரண்டு கடலுக்குள் விழுந்துள்ளது.

வீதியினை புனரமைப்புச் செய்யும் தனியார் நிறுவனத்தின் அசமந்தப் போக்கின் காரணமாக இவ்வாறான நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.நோக்கி சென்ற மேற்படி வாகனம் யாழில் இருந்து வந்த வாகனத்திற்கு வழிவிட்டுக் கொடுக்கையிலேயே இவ்விபரீதம் இடம்பெற்றுள்ளது. எனினும் அவ்வாகனத்தில் பயணித்த அனைவருக்கும் எவ்வித சேதமமும் ஏற்படவில்லை. (21)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1063 | திகதி 05.06.2014

வெற்றி எண்கள்: 05 14 20 43 | ஆங்கில எழுத்து: L

ஜக்பொட் பரிசு ரூ. 3,04,17,980/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை ரூ. | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,04,17,980/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 236 | 1,000/= | ரூ. 2,36,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 404 | 1,000/= | ரூ. 4,04,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11005 | 60/= | ரூ. 6,60,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5782 | 40/= | ரூ. 2,31,280/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 143604 | 20/= | ரூ. 28,72,080/= |
| ஆங்கில எழுத்து | 20942 | 20/= | ரூ. 4,18,840/= |
| | | மொத்தம் ரூ. | 63,72,500/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அநுராதபுரம் | 706327131-5-35 |
| யாழ்ப்பாணம் | 706325272-3-03 |
| கொழும்பு | 706321580-9-19 |
| மொனராகலை | 706320207-6-06 |
| மாத்தளை | 706321921-6-06 |
| கம்பஹா | 706326602-5-05 |
| கண்டி | 706322340-3-13 |
| காலி | 706332965-4-14 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 67,72,500/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 30,699,160/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.06.09 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை


356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/3698)

## நீராவியடிக் கோயிலினிலே வாழும் கணபதியே!

**ஆனைமுகத்தவனே! ஐங்கரனே! சங்கரனார் திருமகனே!**
**ஆறுமுகனின் அண்ணனே! தேறுதல் தரவேண்டுமே!**
**பானை வயிற்றோனே! உந்தன் பக்தர்களைக் காப்பவனே!**
**பாதாரவிந்தம் பணிந்தோம்! ஆதாரகணபதியே! வருக!**
**மோனைப் பொருளே! மூத்தவனே! மூவுலக முதல்வனே!**
**முத்தமிழால் பாடிவந்தோம் வித்தகனே! வரமருள்வாய்!**
**வானைத் தொடும் கோபுர நீராவியடிக் கோயிலினிலே**
**வாழும் கணபதியே! வலம் வந்தோம் சரணம் ஐயா!**

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய ஆறாம் நாள் திருவிழா இன்றாகும்.



"சிவநெறிக் கலாநிதி"
இராசையா ஸ்ரீதரன்

# இராணுவம் அடிமைப்படுத்துமென எவரும் நினைக்க வேண்டாம்

## சிவில் பாதுகாப்புத் திணைக்கள அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் இராணுவத்தின் ஒரு பகுதியே தவிர இராணுவம் அடிமைப்படுத்தும் என்று யாரும் எண்ண வேண்டாம் என சிவில் பாதுகாப்புத் திணைக்கள அத்தியட்சகர் றியல் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்மாவட்டத்தில் புதிதாக இணைந்து கொண்ட சிவில் பாதுகாப்புப் படையினருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த் துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று எமது திணைக்களத்தின் மூலம் தொழில் பெறும் நீங்கள் சந்தோசப்படுகின்றீர்கள். இவ்வாறு தொழில் பெற்றுத்தந்த ஜனாதிபதியை தான் வாழ்த்த வேண்டும். கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்று யாழ்ப்பாணத்திலும் இளைஞர், யுவதிகள் தொழில் பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் உங்கள் பிள்களைகளின் வாழ்வு வளம் பெறும்.

இவர்கள் மூலம் நாட்டின் அபிவிருத்தி மேலும் வளர்க்கப்படும். இந்த இரு மாவட்டங்களிலும் 100 பேர் வரையில் இணைக்கப்பட்டு 3500 பேர் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். அத்துடன் 23 தோட்டங்கள் உருவாக் கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் நாடுமுழுவதிலும் 274 முன்பள்ளிகள் ஏற்படுத்தி அதில் 12,700 சிறார்கள் கல்வி கற்கிறார்கள். இன்று நியமனம் பெறும் உங்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அபிவிருத்திப்பணிகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு நீங்கள் தொழில் முயற்சியினை மேற் கொள்ள வழி ஏற்படுத்தப்படும்.



இந்தத் திணைக்களம் ஒரு அரச நிறுவனம் இதில் கடமைகளின் போது மரணமாகும் சந்தர்ப்பத்தில் குடும்பத் தினருக்கு ஒரு மில்லியன் ரூபா வரையில் நஷ்டஈடும் வழங்கப்படும். இவ்வாறு அரச்சேவையிலுள்ளது போன்ற அனைத்து வசதிகளும் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

அச்சுவேலி சந்நிதிவீதி பத்தமேனி, கதிரிப்பாய் போன்ற பகுதிகளில் இரவுவேளைகளிலும் அதிகாலை வேளைகளிலும் கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் காணப்படுவதாக பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இரவுவேளைகளில் வீதிகளில் படுத்துறங்கும் கட்டாக்காலி நாய்கள் வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளை துரத்திக் கொண்டு செல்கின்றன.

இதனால் பயணிகள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாவதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.


அத்துடன் வீதிகளை அசிங்கப்படுத்தியும் விடுகின்றன. இதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு நோய்கள் பரவும் நிலையினை இக்கட்டாக்காலி நாய்கள் ஏற்படுத்துகின்றன. எனவும் வீதியோர குடியிருப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (85)

## உள்ளூராட்சி நிகழ்வுகளுக்கு பொதுநூலகங்கள் மெருகூட்டல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உள்ளூராட்சி நிகழ்வுகளை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழ் உள்ள பொது நூலகங்கள் மெருகூட்டப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி நூலகப்பகுதி களும் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டு வருவதுடன் அறிஞர் களின் புகைப்படங்களும் இயற்கைக் காட்சிப்புகைப்படங்களும் தொங்க விடப்பட்டுள்ளதுடன் காட்சிப்படுத் தப்பட்டுவரும் வசதிகளும் மேண்மைப் படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (11)



**கைதடி மேற்கு ஞானவைரவர் ஆலய வருடாந்த 1008 சங்காபிஷேக திருவிழா அண்மையில் நடைபெற்றபோது...**
**(51)**




## த. தே. கூ —
## தவறிப்போன தேசியக் கூட்டமைப்பு?
## அல்லது
## தமிழர்களுக்குத் தேவையில்லாத கூட்டமைப்பு?

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறையினால் -**

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமா? சுயாதீனமான – கௌரவமான வாழ்வொன்றைத் தமிழ்ச்சமூகம் பெறுமா?

சர்வதேச சமூகத்தை வென்றெடுக்க முடியுமா?

வடக்கும் கிழக்கும் இணையுமா?

13 பிளஸ் அல்லது அதற்கு மேல் ஏதாவது கிடைக்குமா?

வடக்குக் கிழக்கிலிருந்து இராணுவம் முற்றாக வெளியேறுமா?

உயர்பாதுகாப்பு வலயங்கள் இல்லாமற் போகுமா?

மாகாணசபைக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் கிட்டுமா?

மாகாணசபை மாங்குளத்துக்கோ அல்லது வன்னியில் பொருத்தமான இடத்துக்கோ போகுமா?

விவசாய அமைச்சு அதற்குரிய இடமான விவசாய மாவட்டங்களில் இயங்குமா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்தத் தடவையாவது இந்தியாவை வளைத்துப் பிடித்து விடுமா?

தமிழ் – முஸ்லிம் உறவு உண்மையாகவே கட்டமைக்கப்படுமா?

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் நிச்சயமாகக் கிடைக்குமா?

புதிய பொருளாதாரத் திட்டங்கள் – அபிவிருத்திகள் நடைபெறுமா?

மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வருமா? இந்திய மீனவர்களின் அத்துமீறல் முடிவுக்குக் கொண்டு வரப்படுமா?

அங்கவீனமுற்ற – மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதார – மேம்பாடுகள் கிடைக்குமா?

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மறுவாழ்வைப் பெறுமா? அவர்களுக்கு நல்லதோர் ஒளிமயமான வாழ்க்கை அமைத்துக் கொடுக்கப்படுமா?

யாழ்ப்பாணத்துக்குச் சுத்தமான குடிநீர் கிடைக்குமா? தீவகத்தின் எதிர்காலம் சிறப்புறுமா?

இரணைமடுக்குளம் புனரமைக்கப்படுமா? கிளிநொச்சி விவசாயிகளுக்கான நல்ல காலம் உருவாக்கப்படுமா?

கிளிநொச்சி நகர வீதி விளக்குகள் ஒளிருமா?

வன்னிக்குத் தேவையான ஆசிரியர்கள் கிடைப்பார்களா? வன்னிப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு வழிகிட்டுமா?

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள் கட்டுப்படுத்தப்படுமா?

தமிழ்மக்கள் வெளியாருக்காகவே காத்திருக்கும் நிலை மாறுமா?

உண்மையாகவே தமிழ் பேசும் மக்கள் இனிமேலாவது ஏமாந்து விடாதிருப்பார்களா?

இந்தக் கேள்விகள் ஒன்றும் புதிய சரக்குகள் அல்ல.

ஆண்டுக்கணக்கில், தலைமுறை தலைமுறையாக தமிழ்ச்சனங்களுக்கு மூடை மூடையாகக் கொடுக்கப்பட்ட பழைய சரக்குகளில் [வாக்குறுதிகளில்] இருந்துதான் இந்தக் கேள்விகள் முளைத்திருக்கின்றன.

இந்தக் கேள்விகளுக்குச் சரியான விடைகள் கிடைக்கவில்லை என்றால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது தவறிப்போன தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழர்களுக்குத் தேவையில்லாத கூட்டமைப்பு – த. தே. கூ என்றே வரலாற்றில் எழுதப்படும்.

ஒருபோதும் துன்பமாக மாறாத பொருள் ஒன்று உண்டு. அது நாம் செய்யும் நற்செயலே. - மேட்டர்லிங்க்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இணக்கத்தை விரும்புவதன் அறிகுறி?

கிடைக்கவிருந்த தீர்வுகளையெல்லாம் தமிழ்த் தலைமை உதறிவிட்டு வந்த வரலாற்றை திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. எவ்வளவு அவலங்களை எமது மக்கள் சுமக்கவும், தொடர்ந்தும் சுமந்துகொண்டிருக்கவும் காரணமானார்கள் இவர்கள்!

அறுபது வருடங்களுக்கும் மேலாக இந்தப் பிரச்சினையை இழுத்துவரும் இவர்கள், தீர்வைத் தெளிவாக முன்வைத்ததுமில்லை, கிடைத்தவற்றைப் பெற்றுக்கொண்டு முன்னேறும் விவேகத்தைக் காட்டியதுமில்லை.

இவ்வளவுக்கும் பிறகு, ஈ–மெயில் முகவரிகளை மட்டும் மக்களுக்குக் கொடுக்கிறார்கள். அந்த முகவரிகளுக்கு மக்கள் தீர்வு யோசனைகளை அனுப்ப வேண்டுமாம். அதன்பிறகுதான் என்ன தீர்வைக் கேட்பது என்று இவர்கள் முடிவெடுப்பார்களாம்!

வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் வரைக்கும் "தீர்வு எங்கே?" என்று மக்கள் இவர்களைப் பார்த்துக் கேட்க முடியாதவாறு.... ஆஹா, வைச்சான் பாரு ஆப்பு!

யோசனைகளை மக்கள் அனுப்பி முடிக்க வேண்டும், பிறகு அவற்றைத் திறந்து பார்க்க வேண்டும், அரசாங்கத்துடன் கண்ணைக்கட்டிக் கோவம் போட்டிருப்பதால் பேசப்போக முடியாது, திரும்பவும் சர்வதேசத்திடம் கொண்டுபோய்த்தான் இதைக் காட்ட வேண்டும், பார்த்துவிட்டு அவர்களும் "நல்ல விசயம் நாங்களும் உங்கள் அரசுக்குச் சொல்கிறோம் போய்ப் பேசுங்கள்" என்பார்கள்....

என்ன கதை இது.... 'கோவக்காரப் பெடி'யுடன் ரோசமில்லாமல் நாங்கள் போய்க் கதைப்பதா?...

மக்கள் ஈ–மெயில்களை மறந்துவிடும்படியாக உணர்ச்சிகரமான எதையாவது எடுத்துவிட வேண்டியதுதான். சிங்கள அரசாங்கமோ சிங்கள சமூகமோ தமிழர்களுக்கு எதையும் எப்போதும் தராது என்ற அந்தப் பெரிய ஆணியை மேலும் ஒரு அடி அடித்து இறுக்கி விட்டால், ரோசமுள்ள தமிழன் எவனும் "உங்களால் ஏன் தீர்வை எடுக்க முடியவில்லை?" என்று நாக்கில் பல்லுப் படக் கேட்க மாட்டான்.

சிங்கள சமூகம் ஒருபோதும் தீர்வைத் தர ஒப்பாது என்பதை வீரவன்ச, சம்பிக்க வகையறாக்களைக் காட்டி உணர்ச்சிகரமாகச் சொல்லத் தெரிந்துவிட்டால், பிறகென்ன.... அந்த சர்வதேசத்திற்காக எத்தனை யுகத்திற்கும் காத்திருக்க வேண்டியதுதான்!

அந்தச் சர்வதேசம் நம்முடைய இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி என்ன இழவைச் சொல்லிக் கொண்டிருக்கிறது என்பது பற்றி யாருக்கு என்ன அக்கறை?

13வது திருத்தச் சட்டத்திற்கு மேலாக எந்த அதிகாரத்தைப் பெறுவதானாலும், அவ்வாறான தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வர முடியும். அதற்கு சிங்கள மக்களில் ஒரு பகுதியினதாயினும் வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அதற்கு அவர்களும் சகமனிதர்கள்–அவர்களது நியாயவுணர்விலும் நம்பிக்கை வைத்து, அந்த மனங்களை வெல்ல வழிகளைக் கண்டுகொள்ள வேண்டும். அவர்களது மனசாட்சியைத் தட்டும் விதத்தில் நமது பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் அமைத்து சில அடி தூரமாவது அவர்களை நோக்கி நாம் முன் செல்ல வேண்டும்.

அதன்மூலமே அவர்களும் சில அடிகள் நம்மை நோக்கி வரச்செய்ய முடியும் என்று நம்ப வேண்டும். இது நிறைய உழைப்பையும் மக்கள்மீதான பரிவையும் வேண்டிநிற்பது.

மாறாக, சவால்கள், சர்வதேசத்தைக் காட்டி மிரட்டல்களை விடுத்துக் கொண்டிருப்பதெல்லாம் ஆயுதப் போராட்ட காலத்து மனோநிலையைத் தொடர்ந்தும் தக்கவைப்பதே தவிர, இணக்கத்தை விரும்புவதாக அர்த்தப்படாது.

இலங்கை மீது நேரடியான இராணுவத் தலையீட்டின் மூலம் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பதுபோல் நடித்து, நமது மக்களையும் நம்பவைத்துக் கொண்டிருக்கும் முட்டாள்தனமே அது!

- ஆசிரியர்.

# மோடியின் பதவியேற்பு நிகழ்விற்கு ரணில் அழைத்தால் சென்றிருப்பார் விக்கி

## –என்கிறார் அமைச்சர் கொத்தலாவல–

இந்தியாவின் புதிய பிரதமர் பதவியேற்ற வைபவத்திற்கு தன்னுடன் வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்திருந்தால், வடக்கு மாகாண முதலமைச்சர் அவருடன் சென்றிருப்பார் என அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

மாத்தளை - குருணாகல் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்து பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 17 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்து மிகவும் சிரமப்பட்டே ஆட்சியை கைப்பற்றியது.

17 வருடங்களாக அமைப்பு ரீதியான பணிகளை மேற்கொண்டு, மக்களை ஒன்று திரட்டியே அன்று நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றினோம்.

ஆனால், இன்றைய எதிர்க்கட்சி பொறிகளை வைத்து, பேதங்களை ஏற்படுத்தி, பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு ஆட்சியை கைப்பற்ற முயற்சித்து வருகிறது.

எமது அயல் நாடான இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதி சென்றார்.

இன, பேதம் இல்லை என்பதாலும் சரியான முறையில் நாட்டை ஆட்சி செய்வதாலும் அவற்றை வார்த்தைகளுக்குள் மாத்திரம் வரையறுக்காது செயற்படுவதால், இந்தியப் பிரதமரின் பதவியேற்பு விழாவுக்கு வருமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

எனினும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அந்தக் கோரிக்கையை நிராகரித்தார்.

மோடி, எதிர்க்கட்சித் தலைவருக்கு வருமாறு அழைப்பு விடுத்து, எதிர்க்கட்சித் தலைவர், விக்னேஸ்வரனை தன்னுடன் வருமாறு அழைத்திருப்பாரேயானால் விக்னேஸ்வரன் அவருடன் சென்றிருப்பார் எனவும் அமைச்சர் நிர்மல கொத்தலாவல குறிப்பிட்டுள்ளார்.

# ஜெயசூரியவின் பெயரில் மைதானம் நீக்கக் கோருகிறார் மங்கள எம்.பி.

ருகுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்களை சனத் ஜெயசூரிய எம்.பி. தாக்க முற்பட்டமையை கருத்திற் கொண்டு மாத்தறை மைதானத்தின் பெயர நாமத்திலிருந்து சனத்ஜெயசூரியவின பெயரை நீக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், அண்மையில் ருகுணு பல்கலைக்கழக மாணவர்களின் மீது முன்னாள் கிரிக்கெட் வீரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய தாக்க முற்பட்டமையானது மிகவும் மிலேச்சத்தனமான செயலாகும்.

சனத் ஜெயசூரியவின் குடும்பம் ஐ.தே.கட்சியினரான போதிலும் நான் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இவரது பெயரினை குறித்த மைதானத்திற்கு சூட்டினேன். இருந்த போதிலும் சனத ஜெயசூரிய இவ்வாறு மிலேச்சத்தனமாக நடப்பார் என நம்பவில்லை.

எனவே, குறித்த மைதானத்திலிருந்து சனத் ஜெயசூரியவின் பெயரை நீக்க வேண்டும். அதற்கு பதிலாக புனித செவரல்ஸ் கல்லூரியின் பெயரை சூட்ட வேண்டும் என்றார்.

## மகோற்சவம்

வடவரணி சிமிழ் அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன் அன்னதானம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(150)

# தென்மராட்சி மிருசுவிலில் மாடுகளுக்கு கால்வாய்நோய்

## –இறைச்சி,பால் விற்பனைக்கும் தடை–

(தென்மராட்சி)

தென்மராட்சி, மிருசுவில் வடக்குப் பகுதியில் 3 பட்டிகளிலுள்ள மாடுகளுக்கு கால்வாய் நோய் தொற்றியுள்ளதாக தென்மராட்சி பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் ஜி.இரகுநாதன் தெரிவித்தார்.

இதனால், அங்கு இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுதலும் பால் விற்பனையும் நேற்று முதல் மறு அறிவித்தல்வரை தடைசெய்யப்பட்டுள்ளதுடன், மாட்டிறைச்சிக் கடைகளும் மூடப்பட்டிருக்கும் எனவும் அவர் கூறினார்.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் வரணி வரையான இடங்களிலும் எழுதுமட்டுவாள் ஏ-9 வடக்கு, மிருசுவில் வடக்குப் பகுதியில் குடமியன், நாவற்காடு, எருவன், எழுதுமட்டுவாள் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், வரணி உள்ளிட்ட இடங்களில் பட்டிகளிலுள்ள மாடுகளுக்கே இந்த நோய் தொற்றியுள்ளது.

இந்த இடங்களிலிருந்து மாடுகள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதும் வெளியிடங்களிலிருந்து மாடுகள் மேய்ச்சலுக்காக இந்த இடங்களுக்கு கொண்டு வருவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொற்று ஏற்பட்டுள்ள பிரதேசத்தைச் சுற்றியுள்ள 15 கிலோமீற்றர் பகுதியிலுள்ள மாடுகளுக்கு முதற்கட்டமாக தடுப்பூசி ஏற்றப்பட்டு, தொடர்ந்து தொற்று ஏற்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கனகராயன்குளம் சிறுவர்களை கடத்திய டிப்பர் சாரதி கைது


(கனகராயன்குளம்)

கனகராயன்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் இருவரை கடத்திச் சென்ற டிப்பர் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஆலங்குளப் பகுதியைச் சேர்ந்த க.சஞ்சய் (வயது - 12), இ.நிரோன் (வயது - 14) ஆகிய இருவருமே கடத்தப்பட்ட சிறுவர்களாவார்கள். இவர்கள் அண்மைக்காலமாக பாடசாலைக்கு வரும் போது டிப்பர் சாரதி இம் மாணவர்களை கண்டு தினமும் தம்முடன் வருமாறும் தாம் உங்களைச் சந்தோசமாக வைத்திருப்பேன் எனக் கூறி அழைத்துள்ளார். கடந்த புதன்கிழமை இவர்களை அழைத்த போது இவருடன் செல்வதற்கு ஏற்கனவே தயாராகி வந்த சிறுவர்கள், பெற்றோருக்குத் தெரியாமல் பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றுள்ளனர்.

பின்னர் டிப்பர் சாரதியுடன் ஏறிச் சென்றுள்ளனர். டிப்பர் சாரதியும் அவர்களை ஏற்றிக் கொண்டு சென்று அநுராதபுரம் தாண்டிச் சென்ற போது அச் சிறுவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். உணவிற்காக கடை ஒன்றில் டிப்பரை நிறுத்திய போது இரு சிறுவர்களும் ஓடித் தப்பியுள்ளனர். இரவு நேரத்தில் வழி தெரியாது தடுமாறிய சிறுவர்கள் வீதியால் வந்த இராணுவத்தினரிடம் வழி கேட்டுள்ளனர். சந்தேகம் கொண்ட இராணுவத்தினர் இருவரையும் அருகிலிருந்த பிரியந்தனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.


இவர்களை விசாரித்த பொலிஸார் டிப்பர் சாரதியைக் கைது செய்ததோடு பெற்றோருக்கு தகவலைத் தெரியப்படுத்தி இரு சிறுவர்களையும் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

**பிரெஞ்ச் டி.வி.யில் ஒருவர் பிரெஞ்சும் ஆங்கிலமும் கலந்து பேசினால் அதனை உப தலைப்புகளுடன் தான் ஒளிபரப்புவார்கள். அதே போன்று எமது தமிழ்த் தொலைக்காட்சிகள் செய்யாத காரணம் என்ன? தமிழ் மட்டுமே தெரிந்த பாமரனும் ஆங்கிலம் கற்பதற்கான ஏக்கத்தை உருவாக்குவதை தவிர வேறு நோக்கம் இருப்பதாக தெரியவில்லை.**




**உள்நாட்டு நிலச்சுவாந்தார்கள் பலர் தமது பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பி படிக்க வைக்குமளவு பண-வசதி படைத்தவர்களாக இருந்தனர். ஆட்சியாளரின் ஆங்கிலேய கல்வியை கற்றவர்கள் அரச நிர்வாகத்தில் பங்குபற்றுவது எளிதாக இருந்தது. இன்று ஆங்கில மோகம் கொண்ட தலைமுறைக்கு மேற்குறிப்பிட்ட சரித்திர சான்றுகள் எதுவும் தெரியாது. தெரிந்து கொள்ள விருப்பமும் இல்லை. அவர்களைப் பொறுத்த வரை சரித்திரம் என்ற ஒன்றே கிடையாது. உலகம் இப்போது உள்ளதைப்போல, அப்போது இருந்தது, அது எப்போதும் இப்படித்தான் இருக்கும். ஆங்கிலம் உலக மொழியானது ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்று வாதிப்பார்கள்,**

# ஆங்கில மோகமும் தமிழின் தாகமும்




கலையரசன்.தா

'**ஆங்கிலம்** பேசுவோர் அறிவாளிகள்! தமிழ் பேசுவோர் குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள்!!" இவ்வாறு கூறிக்கொள்ளும், அல்லது நம்பிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கப் பிரிவொன்று இன்றும் எம்மத்தியில் இருக்கின்றது. மக்களுக்குள் பல குழுக்கள் தத்தம் உலகங்களின் உள்ளே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சில நேரம், இப்படியான வெவ்வேறு உலகங்களுக்குள் நுழையக்கிடைக்கும் சந்தர்ப்பங்களில், கிடைக்கும் அனுபவங்கள் வேடிக்கையானவை. அந்த விசித்திர அனுபவங்களை அலசுவதன் மூலம் அவர்களின் உலகையும், அதனூடாக எம்மையும் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கை, 500 வருட காலமாக அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்ததன் விளைவு. இன்று இலங்கையின் மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமல்ல, அடித்தட்டு வர்க்கத்தினர் கூட காலனிய மனவுலகில் வாழ்கின்றனர். அல்லது அப்படி வளர்க்கப்படுகின்றனர். பண்டைய காலங்களில் எமது மூதாதையர் எம்மைப்போல சிந்திக்கவில்லை. நான் நாகரீக வளர்ச்சியை இங்கே குறிப்பிடவில்லை. தன்னிலையுணர்வை, சமூகத்தில் தனது பாத்திரம் பற்றிய வரையறை பற்றியே இங்கே பேசப்படுகின்றது.

தமிழர், சிங்களவர் என்ற மொழியை அடிப்படையாக கொண்ட தேசியம் உருவான 20 ஆம் நூற்றாண்டு வரையில், மக்கள் தமது குலத்தை, சாதியை, பிரதேசத்தை, அதற்கும் மேலால் மதத்தை கொண்டு மட்டுமே தம்மை அடையாளப் படுத்தினர். தாம் என்ன மொழி பேசுகிறோம் என்பது குறித்து யாரும் அலட்டிக்கொள்ளவில்லை. அதனால் வாழும் இடத்தைப் பொறுத்து தமிழர் சிங்களவராவதும், சிங்களவர் தமிழரா வதும் தாராளமாகவே அனுமதிக்கப்பட்டிருந்த காலங்கள் அவை.

ஒரு சாம்ராஜ்யம் நிலைத்து நிற்க வேண்டுமானால், உள்ளூரில் ஒரு அடிவருடிக் கும்பல் உருவாக வேண்டும். அந்தக் குழுவைச்சேர்ந்த பிள்ளைகளை சாம்ராஜ்ய தலைநகருக்கு கல்வி கற்க அனுப்பி வைக்க வேண்டும். ஏகாதிபத்திய கல்வியால் மூளைச் சலவை செய்யப்பட்டு ஊர்திரும்பும் புதிய தலைமுறை, சாம்ராஜ்யத்தின் உள்ளூர் முகவர்களாக ஆட்சியை நிர்வகிப்பார்கள்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் மாபெரும் சாம்ராஜ்யங்களைக்கட்டி ஆண்ட எகிப்தியர்களும், ரோமர்களும் அறிமுகப்படுத்திய "ஒரு சாம்ராஜ்யத்தை நிர்வகிப்பது எப்படி?" என்ற பாடத்தை ஆங்கிலேயர்கள் கச்சிதமாகக் கடைப் பிடித்தனர். உள்நாட்டு நிலச்சுவாந்தார்கள் பலர் தமது பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பி படிக்க வைக்குமளவுப் பணவசதி படைத்தவர்களாக இருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் கிறிஸ்தவர்களாக இருந்ததால் சலுகைகள் கிடைத்தன. ஆட்சியாளரின் ஆங்கிலேய கல்வியை கற்றவர்கள் அரச நிர்வாகத்தில் பங்குபற்றுவது எளிதாக இருந்தது.

இன்று ஆங்கில மோகம் கொண்ட தலைமுறைக்கு மேற்குறிப்பிட்ட சரித்திர சான்றுகள் எதுவும் தெரியாது. தெரிந்து கொள்ள விருப்பமும் இல்லை. அவர்களைப் பொறுத்த வரை சரித்திரம் என்ற ஒன்றே கிடையாது. உலகம் இப்போது உள்ளதைப்போல, அப்போது இருந்தது, அது எப்போதும் இப்படித்தான் இருக்கும். ஆங்கிலம் உலக மொழியானது ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்று வாதிப்பார்கள்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த, உயர்கல்வி கற்று பட்டம் பெற்றோரும் கூட, "ஆங்கிலமே உலகம் முழுவதும் பேசப்படுவதாக" நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களது உலகமானது, கடல் கடந்த தொழில் வாய்ப்பை எதிர்நோக்கும் அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கு அப்பால், எதுவுமே இல்லை. தப்பித்தவறி பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குள் புகுந்து விட்டால், "இந்த மக்கள் ஏன் ஆங்கிலம் பேசுகிறார்கள் இல்லை" என்று நொந்து கொள்வார்கள். அதே நேரம், "ஆங்கிலேயர்கள், தமது தாய்நாட்டில், வேறொரு தொடர்பாடல் மொழி பேச மறுப்பதேன்?" என்ற கேள்வியை கேட்க மாட்டார்கள். சுருக்கமாக சொன்னால், வான் கோழிகளான "கறுப்பு-ஆங்கிலேயர்கள்", மயில்களான "வெள்ளை- ஆங்கிலேயரை"ப் பார்த்து, அது போன்று ஆடுகின்றனர்.

நடுத்தர வர்க்க மக்களில் பலருக்கு தம்மைப் போன்றோர் மட்டுமே உலகில் இருப்பதாக எண்ணம் இருக்கும். அதற்கு காரணம் கலாசாரம் அவர்கள் சார்ந்ததாக இருப்பது தான். திரைப்பட கதா மாந்தர்கள் நடுத்தர வர்க்க பிம்பமாக காட்சிதருவர். இலக்கியங்கள் யாவும் எழுதப்படிக்கத் தெரிந்த பிரிவையே சந்தையாக கொண்டிருக்கும். பல படிமுறைப்பட்ட சமூகத்தில், அந்தஸ்து என்பது பொருளாதாரம் சார்ந்ததாக இருக்கும்.

இதனால் ஒப்பீட்டளவில் உழைக்கும் வர்க்கத்தை விட மேல்நிலையில் இருக்கும் வசதி கருதி, அதை அடையும் வழி கருதி, கல்வியை ஒரு ஊக்கியாக நடுத்தரவர்க்கம் கண்டு கொண்டதில் வியப்பில்லை. சர்வதேச மூலதனத்திற்கு சேவகம் செய்ய ஆங்கிலம் கற்றவர்கள் அவசியம். இன்று அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் மூலதனம் குவிந்து கிடப்பதால், ஆங்கில வழிக் கல்வியின் மதிப்பு அதிகம்.

இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்னரும் ஆங்கிலமே பாடசாலைகளில் போதனா மொழியாக இருந்தது. ஐம்பதுகளில் தேசியவாத சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்து பிரதமரான பண்டாரநாயக்க வந்த பின்னரே மாபெரும் சமூக-கலாசார மாற்றம் ஏற்பட்டது. சிங்களப்பகுதிகளில் சிங்களமும், தமிழ் பகுதிகளில் தமிழும் போதனாமொழியாகியது.

பண்டாரநாயக்கவை ஒரு சிங்கள இனவாதியாக பார்க்கும் தமிழர்கள், தமது பிள்ளைகள் தமிழ் கற்க காரணம் யார் என்று சொல்வதில்லை. அதேநேரம் அவரை ஒரு முற்போக்குவாதியாக பார்க்கும் சிங்களவர்கள் இன முரண்பாடுகளின் தோற்றத்தை கண்டுகொள்வதில்லை. அதேநேரம் ஏகாதிபத்தியமும் தனது நலன்களை பற்றி மட்டுமே அக்கறைப்பட்டது. கல்வியை தேசிய மொழியாக்குவதும், பொருளாதாரத்தை தேசியமயமாக்குவதும், ஏகாதிபத்திய எதிர்ப்பாக புரிந்து கொண்ட சி.ஐ.ஏ. ஒரு புத்த பிக்குவிடம் துப்பாக்கியை கொடுத்து கொலை செய்ய வைத்தது.

பண்டாரநாயக்க காலத்தில் ஏற்பட்ட திருப்புமுனையின் பின்னர் தான், ஆங்கிலம் பேசுவோர் "சர்வதேசவாதிகள்" (ஏகாதிபத்திய விசுவாசிகள் என்பதன் நாகரீக வடிவம்) ஆனார்கள். இப்போது கூட உள்நாட்டு அரசியல்வாதிகளைப் பரிகசித்துக் கொண்டிருக்கும் இந்தக்"கறுப்பு-ஆங்கிலேயர்கள்", ஐரோப்பிய வெள்ளையின "தேவர்களின் வருகைக்காக" காத்திருக்கின்றனர்.

நவீன தமிழின் நிலைமையை, நவீன அரபு மொழியுடன் ஒப்பிட்டுப்பார்ப்போம். அரபு மொழி, தமிழ் மொழி போல இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த செம்மொழி தான். நவீன அரபு மொழியானது நிறைய ஆங்கில அல்லது பிரெஞ்ச் சொற்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அனைத்து அரபு நாடுகளிலும் காலனித்துவ ஆட்சியாளர் அறிமுகப்படுத்திய கல்விமுறையே இன்றுவரையில் போதிக்கப்படுகின்றது. ஆனால் அவ்வவ் நாடுகளின் அரசியல்- பொருளாதார ஆதிக்கத்திற்கு உட்பட்டு, கல்வியின் போதனா மொழி மாறுபடுகின்றது. இரண்டு மாறுபட்ட உதாரணங்களைப் பார்ப்போம்.

மொரோக்கோவில் உயர்கல்வி முழுக்க முழுக்க பிரெஞ்ச் மொழியில் போதிக்கப்படுகின்றது. இதனால் சிறுவயதில் இருந்தே பிரெஞ்ச் மொழி வழிக் கல்வியை பெற்றுவரும் நடுத்தர வர்க்க மாணவர்கள் இலகுவாக உயர்கல்வி கற்க வாய்ப்பாகின்றது. அதற்கு மாறாக நாட்டுப்புறங்களில் வாழும் உழைக்கும் வர்க்க பிள்ளைகள், தாய் மொழியான அரபு மொழியில் கல்வி கற்பதால், உயர்கல்விக்கான வாய்ப்பு தடைப்படுகின்றது.

பிரெஞ்சு வழிக் கல்வி கற்ற "புத்திசாலிகள்" வசதிபடைத்தோராயும், அரபு வழிக் கல்வி கற்ற "முட்டாள்கள்" வசதியற்ற ஏழைகளாகவும், சமூகத்தில் பார்க்கப்படுவதற்கு இத்தகைய பாரபட்சமான கல்விமுறை ஏதுவாகின்றது. அதே நேரம் அசாத் தலைமையில் சோஷலிச மாற்றங்கள் ஏற்பட்ட சிரியாவில், அனைத்துப் பாடங்களும், மருத்துவம் உட்பட, அரபு மொழியிலேயே போதிக்கப்படுகின்றன. இதனால் அனைவரும் கல்விகற்கும் வாய்ப்பு ஏற்பட்டதால், அரபுலகில் அதிகம் படித்தவர்களைக் கொண்ட நாடாக சிரியா திகழ்கின்றது.

நம்மவர்கள் அதிகம் மெச்சிக் கொள்ளும் ஐரோப்பிய உதாரணங்களைப் பார்ப்போம். இங்கிலாந்தில் ஒரு காலத்தில் அரச குடும்பத்தினரும், பிரபுக்களும் பிரெஞ்சில் கல்வி கற்று பிரெஞ்ச் மொழியிலேயே தமக்குள் உரையாடினர். ரஷ்யாவிலும் அது தான் நிலைமையாக இருந்தது. ஆளும் வர்க்கத்தால் கீழ்த்தரமாக பார்க்கப்பட்ட ஆங்கில, ரஷ்ய மொழிகள் கல்வியறிவற்ற சாதாரண குடிமக்களால் மட்டுமே பேசப்பட்டு வந்தது.

என்றைக்கு இங்கிலாந்தில் ஆங்கில மொழியும், ரஷ்யாவில் ரஷ்ய மொழியும், போதனா மொழியாகியதோ, அப்போதிருந்து தான் கல்வி கற்றோர் எண்ணிக்கை பெருகியது. இன்று அந்நாடுகளில் மொத்த சனத்தொகையும் எழுத, வாசிக்க தெரிந்து வைத்திருக்கின்றது என்றால், அதற்கு தாய்மொழிக் கல்வியே காரணம்.

நமது நாடுகளில், அந்நிய மொழியை புறக்கணித்து, தாய்மொழிக் கல்வியை ஊக்குவிக்கப் படாததன் காரணம், வெளிநாட்டு மூலதனத்தின் கவர்ச்சிக்கு மயங்கும் மக்களும், நவகாலனிய முகவர்களாக செயற்படும் அரசியல்வாதிகளும் தான். அரசியல்வாதிகள் எவ்வழியோ, குடிமக்களும் அவ்வழியே மேற்குலக மோகத்திற்குள் மயங்கிக் கிடக்கின்றனர்.

தமிழ் செம்மொழி என்று பழம் பெருமை பேசுவதாலோ, தமிழ்க் கலாசாரத்தை பாதுகாப்பதாலோ, அல்லது தமிழ் தேசியம் கோலோச்சுவதாலோ, பாரிய மாற்றங்களை கொண்டுவர முடியாது. இங்கிலாந்து கண்ட தொழிற்புரட்சி, ரஷ்யா கண்ட போல்ஷெவிக் புரட்சி, சிரியா கண்ட (முற்போக்கு) இராணுவப்புரட்சி இவையெல்லாம் பொருளாதார சுதந்திரத்தை முதலில் உறுதிப்படுத்திக் கொண்டதால் தான் தமது தாய் மொழியை அரியணையில் அமர்த்த முடிந்தது.

வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்வோம்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச்செய்ய வேண்டும்

## அஸ்கிரிய பீடம் கோரிக்கை

13ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு அஸ்கிரிய பீடம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்திய அழுத்தங்களுக்கு அடிபணிந்து விடாது 13ஆம் திருத்தச் சட்டத்தை உடனடியாக அரசாங்கம இரத்துச்செய்ய வேண்டுமென அஸ்கிரி பீடத்தின் சிரேஸ்ட உறுப்பினர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார். சர்வதேச ரீதியில் இலங்கை எதிர்நோக்கி வரும் அழுத்தங்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டமே முக்கிய ஏதுவெனத் தெரிவித்துள்ளார்.


13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாகாணசபை முறைமையினால் பணம் விரயமாவதனைத் தவிர வேறு எந்த நன்மைகளும் ஏற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியா பரிந்துரை செய்யும் எல்லா காரியங்களையும் செய்ய வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் வரையறுக்கப்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.



சுற்றாடல் பாதுகாப்பில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளமைக்காக கொழும்பு றோயல் கல்லூரிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விருது வழங்கி கௌரவித்தார். கல்லூரியின் அதிபர் உபாலி குணசேகர ஜனாதிபதியிடமிருந்து விருது பெறுவதைக் காணலாம்

# சிகரெட் விற்பனையில் பெருமளவில் வீழ்ச்சி



நாட்டில் 2011ஆம் ஆண்டில் 4,505 மில்லியனாகவிருந்த சிகெரட் விற்பனை 2012 ஆம் ஆண்டில் 4310 மில்லியனாக குறைத்துள்ளது. இதன் மூலம் 195 மில்லியன் அளவில் சிகரெட் விற்பனை குறைந்துள்ளதாக பிரதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை வாய் மூல கேள்விக்கான விடை நேரத்தின் போது ஐ.தே.கட்சி எம்.பி. புத்திக பத்திரண நாட்டின் சிகரெட் விலைகள் அதிகரிப்பு, பாவனை தொடர்பாக கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதி நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இவ்வாறு தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் இங்கு தொடர்ந்து பதிலளிக்கையில், 2002 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தனிநபர் வருமானம் மற்றும் தேசிய உற்பத்திகள் உயர்வுக்கேற்ப சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

சிகரட் விற்பனையில் கோல்ட் லீப் வர்க்க சிகரெட்களே 85 வீதம் விற்பனையாகியுள்ளன. ஒரு சிகரெட் விற்பனை மூலம் அரசுக்கான வருமானம் 71 சதமாகும். எஞ்சிய 29 சதம் விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு புகையிலை கம்பனிக்கு செல்கிறது என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டு பதிலளிக்கப்படவேண்டியது அவசியம்

## சபாநாயகர் தெரிவிப்பு



(கொழும்பு)

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படவில்லை என இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என சபாநாயகர் சமால் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பிரித்தானிய நாடாளுமன்றிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் போலி குற்றச்சாட்டுக்கள் முறியடிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருவதாக சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் இலங்கை தொடர்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு இலங்கை நாடாளுமன்றம் உரிய முறையில் பதிலளிக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு பிரித்தானிய அரசியல் வாதிகளின் ஆதரவினை பெற்றுக் கொண்டார்கள் என்பது பற்றி உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# ஆஸியிலுள்ள இலங்கையருக்கு மனவள ஆலோசனை

அவுஸ்ரேலியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு மனவள ஆலோசனை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது.

அவுஸ்ரேலியாவின் குடிவரவுத் துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை அகதிகள் மத்தியில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு வார காலப்பகுதியில் இரண்டு பேர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர். மிகவும் அழுத்தமான மனநிலையினாலேயே இவ்வாறான தற்கொலை முயற்சிகள் இடம்பெறுகின்றன. இந்த நிலையில் அவர்களுக்கு மனவள ஆலோசனைகளை வழங்கும் நடவடிக்கைகள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவுஸ்ரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள ஒப்பந்தம் இருக்கும் வரைக்கும் இலங்கை புகலிட கோரிக்கையாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என ஆஸியில் உள்ள அகதிகளுக்கான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இலங்கை அகதிகளை மட்டும் திட்டமிட்டு நாடுகடத்துவது உண்மையில் அவுஸ்ரேலிய மக்கள் மத்தியில் மிகவும் வேதனையளிக்க கூடிய விடயம் எனவும் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கையுடன் இரகசிய உடன்படிக்கை முற்றாக மறுக்கிறது ஐ.எம்.எவ்.

(கொழும்பு)


இலங்கை அரசாங்கத்துடன் இரகசிய உடன்படிக்கைகள் எதுவும் செய்து கொள்ளப்படவில்லையென சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல அண்மையில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றும் போது இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள பல உப உடன்படிக்கைகளை வெளிபடுத்த வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்தநிலையில் இது குறித்து ஐக்கிய நாடுகளின் இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர் ரைஸிடம் கேள்வி எழுப்பினார். இதன் போது தாம் எழுதி வைத்திருந்த பதிலை ரைஸ் வாசித்தார். அதில் தம்முடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை இலங்கை 2012 ஆம் ஆண்டளவில் நிறைவுசெய்து விட்டதாக குறிப்பிட்டார்.

இதனையடுத்து தற்போது இலங்கை அரசாங்கத்துடன் எந்த நிதிக் கொடுப்பனவு உடன்படிக்கைகளும் இல்லை என்றும் ரைஸ் தெரிவித்தார். அத்துடன் பிரதான உடன்படிக்கைகளுக்கு புறம்பாக வேறு உடன்படிக்கைகள் இல்லை என்றும் ரைஸ் தெரிவித்தார்.

# எகிப்தியரை கொலைசெய்த இலங்கைப் பெண் கைது



(கொழும்பு)

தற்பாதுகாப்புக்காக எகிப்தியர் ஒருவரை கொலை செய்ததாக கூறப்படும் இலங்கைப் பெண் ஒருவரை குவைத் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குவைத்தின் ஹாவாலி என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர் மாடி ஒன்றில் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து பொதுமக்கள் அங்கு சென்ற போது குறித்த எகிப்தியர் இரத்தம் தோய்ந்த நிலையில் வீழ்ந்து கிடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஓடித் தப்பிக்க முயற்சித்த இலங்கைப் பெண் ஒருவரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இதன்போது வாக்குமூலம் அளித்த பெண், குறித்த எகிப்தியர் தம்மை பாலியல் வல்லுறவு செய்ய முயற்சித்தார் என்றும், அதனைத தடுக்கவே தாம் அவரை தாக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தற்செயலான சம்பவம் என்று குறித்த இலங்கைப் பெண் தெரிவித்துள்ளார்.

# மாடுகள், பன்றிகளுக்கு பதிலளிக்க மாட்டார் எஸ்.பி.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமே தன்னால் பதிலளிக்க முடியும் எனவும் மாடுகளுக்கு, பைத்தியகாரர்களுக்கு, நரிகளுக்கு, பன்றிகளுக்கு தன்னால் எழுத்து மூலமாக கையெழுத்திட்டு வாக்குறுதிகளை வழங்கப் போவதில்லை என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இணை சுகாதார மாணவர்களின் எழுத்து மூலமான கோரிக்கை தொடர்பில் கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் மாடுகளுக்கும், பைத்தியக்காரர்களுக்கும், நரிகளுக்கும், பன்றிகளுக்கும் பதிலளிக்க மாட்டேன்.

பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே நான் பதிலளிப்பேன். நரிகள் கூறுவதற்கெல்லாம் என்னால் பதிலளிக்க முடியாது.

உயர்நீதிமன்றம் வரை சென்ற இந்தப் பிரச்சினையில் ஜனாதிபதி தலையிட்டதால் அந்தப் பிரச்சினை 75 வீதம் தீர்க்கப்பட்டு விட்டது.

பட்டப்படிப்பு காலம் தொடர்பான தீர்மானத்திற்கு உபவேந்தர்கள், பீடாதிபதிகள், மாணவர்கள், மருத்துவ சங்கம் என்பன இணங்கியுள்ளன.

பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ள நிலையில், முன்னிலை சோசலிசக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் தான் இந்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை.

பிரச்சினையை மேலும் இழுபறி நிலைக்கு கொண்டு சென்று தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதே அவர்களின் எதிர்பார்ப்பு எனவும் அமைச்சர் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# சீருடைகூட சீராக இல்லாத நிலையிலும் கல்வியில் ஆர்வமுள்ள மாணவ சமுதாயம்

## வவுனியா நகரசபை முன்னாள் உபதலைவர் தெரிவிப்பு



(வவுனியா)

கல்வி என்பது இன்றைய காலத்தில் மிக முக்கியமானதாக மாறிவிட்டதுடன் மாணவர்கள் பலர் இங்கு வெள்ளை சீருடை கூட சீராக இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அதையும் தாண்டி கற்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடத்தில் இருப்பது பாராட்டப்படவேண்டுடியது அவசியம்.

எனவே பெற்றோர் ஆசிரியர்கள் இந்த மாணவ சமுதாயம் நல்லவழியில் செல்ல வழி காட்ட வேண்டும் என கோயில் குளம் இளைஞர் கழக ஸ்தாபகரும், புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும் வவுனியா நகர சபை முன்னாள் உபதலைவருமான சந்திரகுலசிங்கம் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

புங்குடுதீவைச் சேர்ந்த அமரர் செல்வி.பரஞ்சோதி செல்வநிதியின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சகோதரி திருமதி சிவநிதி பன்னீர்ச்செல்வம் குடும்பத்தினர், சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் அனுசரணையில் வவுனியா, விளக்கு வைத்தகுளம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா புதிய வேலர் சின்னக் குளம் ஆனந்த குமாரசாமி வித்தியாலயம், வவுனியா றம்பைக் குளம் நடராஜா வித்தியாலயம், வவுனியா விளாத்திக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளின் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்குத் தேவையான "கற்றல் உபகரணங்கள்" வழங்கி வைக்கப் பட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை விளக்குவைத்த குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வைத்து இக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் கோயில் குளம் இளைஞர் கழக ஸ்தாபகரும், புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும், வவுனியா நகர சபை முன்னாள் உபதலைவருமான சந்திரகுலசிங்கம் (மோகன்), புளொட் முக்கியஸ்தர் மு.கண்ணதாசன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தரும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினருமான ஜோர்ஜ் வொசிங்டன், வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் செ.சந்திரகுமார் (கண்ணன்), கோயில்குளம் இளைஞர் கழக செயலாளர் ஜனார்த்தனன், கோயில்குள இளைஞர் கழக இணைப்பாளர் காண்டீபன், தொழில்நுட்ப இயக்குநர் சதீஸ் என பலர் கலந்து கொண்டனர்.

## முரசின் இன்றைய பலன்

(07.06.2014 சனிக்கிழமை)



ஜய வருஷம் வைகாசி மாதம் 24 ஆம் திகதி.
நவமி / மரணயோகம்.
உத்தரம் மு.ப. 01.05 வரை. பின் அத்தம்.
இராகு காலம 08.52 - 10.22 வரை. சுபநேரம 02.52 - 04.22 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இடைத்தங்கல் நாட்டில் புரிந்த அஞ்ஞாத வாசம் முடிடைந்து விரும்பிய இடம்சேருதல், துணைவரின் நடத தையில் ஏற்பட்ட சந்தேகம் சந்தோஷத்தைத் தொலைத்தல். |
| ரிஷபம் | பரோபகாரச் சிந்தையினால் உதவிசெய்து பாராட் டைப்பெறுதல், திக்குமுக்காடி தத்தளித்த நேரத்தில் சகோதரர் கைதூக்கி விடுதல். |
| மிதுனம் | சீறிச்சினந்து விழாது வாழிக்கையாளருடன் சுமுகமான உறவைப்பேணுதல்நன்மை பயக்கும், விலைப்பட்டியலை காட்சிப்படுத்தத்தவறியமையினால்எச்சரிக்கை செய்யப்பட்டல். |
| கடகம் | பெற்றோரின் உடல் நலத்தை கருத்தில் கொண்ட தால் தொலைபேசியில் கதைத்த முக்கிய விடயத்தை ஞாபகப்படுத்த முடியாதிருத்தல். |
| சிம்மம் | வியாபாரம்பாரிய நஷடத்தைநோக்கிச் சென்று கொனே டிருப்பதினால் இழுத்து மூடமுயலல், பழைய சம்பவமொன்று மனதை உறுத்துவதினால் பதகளிப்பு நிலைமை அடைதல். |
| கன்னி | திட்டமிடாது எழுந்தமானத்தில் பணியைத்தொடங் கியதால்முடித்து வைக்கக முடியாது திண்டாடுதல், பிள்ளை களின்பணிவற்ற, பண்பற்ற நடத்தையைக்கண்டு துக்கப்படல். |
| துலாம் | சட்டவிரோத மின்பாவனை மற்றும் அனுமதியின்றி அரச சாராயம் விற்றதால் தண்டம் பெறுதல், வேகத்தடை அணையைக் கடக்க முற்பட்டவேளை விபத்து. |
| விருச்சிகம் | அரசுப்பணியில் ஈடுபட்டவருக்கு மேலதிகாரியின் நச்சரிப்பு ஏற்படும், உறுதியில் பிரச்சினை இருந்ததி னால் வாங்கிய மனைக்கு கால்பதிக்க முடியாதிருத்தல். |
| தனுசு | தன்னிச்சையாக நடக்க வெளிக்கிட்ட பிள்ளைக்கு புத்தமதி கூறி நடத்தையை மாற்றல், குடும்பசகிதம் தெய் வத்திருத்தலத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ளல். |
| மகரம் | திகதிதப்பிய பொருள் என்று அறியாமல் மனைக்கு எடுத்துச் சென்றவேளை ரகளை ஏற்படல், வெற்றுக் காசோ லையில்ஒப்பமிட்டுச்சென்றதினால்மோசழ நிலை உருவாதல். |
| கும்பம் | வாடகைக்கு குடியமர்த்தியவர்களை எழுப்ப முடியாத நிலையில் காவல்துறையை நாடல், வெளியூர் பயணம். |
| மீனம் | உங்களுக்கு ஏற்பட்ட புகழ் மற்றவர்களின் கண்ணைக குத்துவதால் அவதானமாக இருக்கவும், இயந்திரக் கோளாறினால்பிரயாணத்தில்இடையூறினை எதிர்பாருங்கள். |

## வீதி புனரமைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி, இடைக்காடு பாடசாலை வீதியானது தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்தை மேற்கொள்வோர் சிரமமின்றிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியானது நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமான நிலையில் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. தற்போது வீதியானது புனரமைப்புச் செய்யப்பட்டு சீரான போக்குவரத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (85)

## புதியநிர்வாகத் தெரிவு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு கடந்த சனிக்கிழமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிர்வாகத்தெரிவில் சபையின் நெறியாளர்கள், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக மு.ஜெகதேவன், உபதலைவராக அல்வின், செயலாளராக சு.ஜனார்த்தனன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நெறியாளர் சபை உறுப்பினர்களாக திருமதி.எஸ்.சறோஜினிதேவி, சி.ஜெயராசா, சி.ஈஸ்வரன், ச.றஜீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (116)



# குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

(13.06.2014 முதல் 04.07.2015 வரை)

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2)

**எதையும் சாதிக்கும் வல்லமையுள்ள இடப ராசிக்காரர்களே!**

கடந்த ஓர் ஆண்டாக குருபகவான் உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளைத் தந்து கொண்டு இருந்தார். மனதில் துணிச்சல் பிறந்து உங்கள் ஆற்றல் மேம்பட்டு இருக்கும். இவ்வளவு நன்மைகளை தந்து கொண்டிருந்த குரு, 2 ஆம் இடமான மிதுனத்தில் இருந்து 3 ஆம் இடமான கடகத்துக்கு வந்துள்ளார். இது சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. தீதிலாதொரு மூன்றிலே துரியோதனன் படை மாண்டது என்பது ஜோதிட வாக்கு. பொதுவாக குரு 3 ஆம் இடத்தில் இருக்கும்போது முயற்சியில் தடை ஏற்படும்.

எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காது. உங்கள் நிலையில் மாற்றம் ஏற்படும். அப்படியானால், குருவால் பிற்போக்கான பலன்கள்தான் நடக்குமோ என்று அஞ்ச வேண்டாம். காரணம் குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் குருவின் அனைத்து பார்வைகளும் சாதகமாக உள்ளன. குருபகவான் தான் இருக்கும் இடத்தில் இருந்து 5, 7, 9 ஆவது வீட்டைப் பார்க்கிறார். குருவின் பார்வைக்கு கோடி நன்மை உண்டு. எனவே குருவின் பார்வைகளால் பல்வேறு நன்மைகள் கிடைக்கும். எதிர் இடையூறுகளை உடைத்தெறிவீர்கள்.

அதோடு நாம் மற்ற கிரகங்களின் நிலையையும் கொண்டு பலனைக் கணக்கிட வேண்டும். கேதுவால் எடுத்த காரியம் அனைத்தையும் சிறப்பாகச் செய்து முடிக்கலாம். பொருளாதார வளம் அதிகரிக்கும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். அதே நேரம் வீண்விவாதங்களில் தொடர்ந்து ஈடுபடாமல் இருப்பது நல்லது. டிசம்பருக்கு பிறகு எடுத்த காரியத்தில் சிறுசிறு தடைகள் வரலாம். சிலர் ஆடம்பர பொருட்களை வாங்குவர். குடும்பத்தில் வசதிகள் மேம்படும். கணவன் - மனைவி இடையே சிறு சிறு மனக்குழப்பங்கள் வரலாம். சுபநிகழ்ச்சிகள் குருவின் பார்வையால் நடக்கும். சிலர் சற்று முயற்சி எடுத்து புதிய வீடு கட்டுவர். அல்லது தற்போது இருப்பதை விட வசதியான வீட்டிற்கு குடிபுகுவர். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்.

**பணியாளர்கள்:-**

அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். ஆனாலும், அந்த பளுவுக்கும் உழைப்புக்கும் ஏற்ற வருமானம் இருக்கும். மேல் அதிகாரிகள் உங்களிடம் உரசினாலும் அனுசரித்துப் போகவும். சகஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். வழக்கமான சம்பள உயர்வுக்கு எந்தத் தடையும் இல்லை.

**பெண்கள்:-**

குடும்பத்தில் அவ்வப்போது பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அப்போது விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உங்கள் மூலம் குடும்பம் சிறக்கும். புத்தாடை அணிகலன்கள் வாங்குவீர்கள். விருந்து, விழா என சென்று வருவீர்கள். நவம்பர், டிசம்பர் மாதத்தில் குடும்பப் பிரச்சினை மறையும். எடுத்த காரியம் வெற்றி அடையும்.

**கலைஞர்கள்:-**

புதிய ஒப்பந்தங்களைப் பெற சற்று முயற்சி எடுக்க வேண்டியது இருக்கும். பண வரவு குறையாது. போட்டி பலமாக இருக்கும். யூன், யூலை மாதத்தில் அரசிடம் இருந்து விருது போன்றவை கிடைக்கும்.

**மாணவர்கள்:-**

படிப்பில் சீரான வளர்ச்சி இருக்கும். குருவின் பார்வை சிறப்பாக இருப்பதால் உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன் கிடைக்கும். எனவே சுறுசுறுப்பை வரவழைத்து படியுங்கள்.

**குரு அதிசார பலன்!**

இந்த நிலையில் குருபகவான் டிசம்பர் 3 ஆம் திகதி அதிகாரம் பெற்று கடகத்திலிருந்து சிம்ம ராசிக்கு மாறுகிறார். 22 ஆம் திகதி வரை அதில் இருப்பார். இதனால் இந்த அதிகாரக் காலத்தில் உங்களது ஆற்றல் மேம்படும். இதுவரை இருந்த மந்த நிலை மாறும். துணிச்சல் பிறக்கும். பண வரவு கூடும். தேவையான பொருட்களை வாங்கலாம்.

**பரிகாரம்:-**

குரு பகவானுக்கு முல்லை மலர் மாலை அணிவித்து அர்ச்சனை செய்யுங்கள். ராகு சிறப்பாக இல்லாததால் அவருக்கும் அர்ச்சனை செய்யுங்கள்.

வியாழக்கிழமைகளில் தட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள். டிசம்பர் 16 முதல் ஆஞ்சநேயரை வணங்கி வாருங்கள். காக்கைக்கு அன்னமிட்டு உண்ணுங்கள். காலையில் விநாயகரை வணங்குங்கள். மேலும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது நவக்கிரகங்களை சுற்றி வாருங்கள். வறிய குழந்தைகளுக்கு படிப்பதற்கு இயன்ற உதவியைச் செய்யவும். மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி... என்ற துதியை தினமும் பாடுங்கள்

# மாகாண மட்ட கால்பந்து கிண்ணம் வென்றது பற்றிக்ஸ்







யாழ். மத்திய கல்லூரி



பள்ளிமுனை சென். லூசியா வித்தியாலயம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத் தின் விளையாட்டுப் பிரிவு மாகாணப் பாடசாலைகளுக் கிடையில் தற்போது பெருவிளையாட்டுப் போட்டி களை நடாத்தி வருகின்றது. இதில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் நேற்று வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத் தவை அல்ல என்பதனை வெளிப்படுத்தும் வகை யில் முட்டி மோதிக் கொண்டன. இதனால் இறுதி வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் மன்னார் பள்ளிமுனை சென். லூசியா வித்தியாலய அணியும், மன்னார் முருங்கன் மகாவித்தியாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பள்ளிமுனை சென். லூசியா வித்தியாலய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதேவேளை, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இதில் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி யும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி யும் மோதவுள்ள அதேவேளை, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும் மோதவுள்ளன.

வடமாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப் பாளர் கே. சத்தியபாலன் தலைமையில் நடைபெற்று வரும் இப்போட்டி நிகழ்வில் கோட்ட, வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டி களை கண்டுகளித்து வருகின்றனர். (93,12)

# சிறந்த வீரராக டிவில்லியர்ஸ் தேர்வு



(ஜோகன்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதை டிவில்லியர்ஸ் கைப்பற்றினார்.

கிரிக்கெட் தென்னாபிரிக்கா (சி.எஸ்.ஏ.,) சார்பில், ஒவ்வொரு ஆண்டும் விருதுகள் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் டிவில்லியர்சுக்கு கிடைத்தது. தவிர, சிறந்த டெஸ்ட், பிளேயர் ஓப் இயர் மற்றும் இரசிகர்களின் மனம் கவர்ந்தவர் என, மொத்தம் 4 விருதுகள் இவருக்கு கிடைத்தது.

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் ஹட்ரிக் சதம் உட்பட மொத்தம் 4 சதங்கள் அடித்த குயின்டன் டி கொக், சிறந்த ஒருநாள் வீரராக தேர்வு செய்யப்பட்டார்.

ருவென்ரி-20 போட்டிக்கான விருதை சுழல் வீரர் இம்ரான் தாகிர் கைப்பற்றினார். வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன் டெலிவரி ஓப் இயர், கடைசி டெஸ்டில் சதம் அடித்த கலிஸ், மிகவும் சிறந்தவர் என்ற விருது களை வென்றனர். சிறந்த வீராங்கனை விருதை, மரிஜானா காப் தொடர்ந்து இரண்டாவது முறை யாகப் பெற்றார்.

## மட்டுவில் மோகனதாஸின் கரப்பந்து

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை விரைவில் நடாத்தவுள்ளது. யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இச்சுற்றுப் போட்டி மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது. இப்போட்டித் தொடரில் பங்குகொள்ளவுள்ள அணிகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் 0772269817 அல்லது 0772269818 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும், இப் போட்டி யில் கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதியான பரிசில் கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித் துள்ளனர். (இ)




# சர்ச்சை கிளம்பியது "ரன் அவுட்"

(லண்டன்)

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான 5ஆவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து வீரர் ஜோஸ் பட்லரை பந்து வீசாமலேயே ரன் அவுட் செய்தார் சேனநாயக்க. இந்த விவகாரம் தற்போது சூடான வாக்குவாதமாக மாறியுள்ளது.

இது குறித்து இங்கிலாந்து கப்டன் குக் குறிப்பிடுகையில், இந்த ரன் அவுட் மூலம் இலங்கை அணி கட்டுப்பாட்டுக் கோட்டை மீறிவிட்டது. டெஸ்ட் போட்டிகளின் போது இதனால் சற்று சலசலப்பான சூழ்நிலைகள் ஏற்படும். இது தவிர்க்க முடியாததே.

இதற்கு பதிலடியாக கிரிக்கெட் ஆட்டம்தான் இருக்கவேண்டும். பேசிய வார்த்தைகள் திறமை யான ஆட்டமாக மாறவேண்டும்.

மீண்டும் இதனைச் செய்வேன் என்று இலங்கை கப்டன் மத்தியூஸ் கூறுகிறார் என்றால் ஒரு கப்டனாக தன் அணி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் அவர் கவனிப்பது அவசியம் இவ்வாறு கூறினார் குக்.

இது குறித்து இலங்கை கப்டன் மத்தியூஸ் கூறுகையில், அவரது ஓடும் வேகத்தை நிறுத்த என்னதான் செய்வது இதைத் தவிர? அதனால்தான் இப்படி ரன் அவுட் செய்ய முடிவெடுத்தோம் என்றார்.

இது குறித்து மஹேல ஜெயவர்த்தன குறிப் பிடுகையில், முதல் எச்சரிக்கைக்கு முன்பே கூட இருமுறை அவரை எச்சரித்தோம், பட்லரும், ஜோர்டானும் ரன்னர் முனையில் பந்து வீசும் முன் பாக கிரீஸை விட்டு கொஞ்சம் அதிகமாகவே முன் னேறுகின்றனர் என்று கூறினோம். மீண்டும் மீண்டும் அவர்கள் இதனைச் செய்யவே நாங்கள் ரன் அவுட் செய்ய முடிவெடுத்தோம் வேறு வழியில்லை.

லோர்ட்ஸ் போட்டியில் கடைசி ஓவர்களில் 22 முறை இரண்டு ரன்கள் எடுத்தனர். அப்போது அனைத்து தடவைகளிலும் கிரீஸை விட்டு நன்றாகவே வெளியே சென்றனர். இது கிரிக்கெட் விதி முறைகளுக்குப் புறம்பானது.

நடுவர்களிடமும் எச்சரித்தோம், ஆனால் அவர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் அவர்கள் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. எனவே நாங்கள் சரியான முடிவை எடுக்கத் தள்ளப்பட்டோம்.

நாங்கள் எப்பவும் சரியான உணர்வுடனேயே ஆடி வருகிறோம், ஆனால் எதிரணியினர் விதி-முறைகளை மீறும்போது நாங்கள் இப்படிச் செய்ய நேரிடுகிறது. இது துரதிர்ஷ்டவசமானதே என மஹேல ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கிரிக்கெட் விதியின் படி இலங்கை அணி ஆட்டமிழப்புக் கோரியதில் தவறில்லை. இருப்பினும் பட்லரை ஆட அனுமதித்திருந்தால் வரலாற்றில் நற்பெயரை இலங்கை அணியால் பதி வாக்கியிருந்திருக்க முடியும் என இலங்கை அணி யின் முன்னாள் கப்டன் ரணதுங்க தெரிவித்துள் ளார்.

# ஊக்க மருந்து சோதனை

(லுகானே)

கால்பந்து இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உலக கோப்பை கால்பந்து போட்டி பிரேசில் நாட்டில் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முதல் முறையாக உலக கோப்பை கால்பந்து போட்டியில் விளையாடும் ஒவ்வொரு வீரர்களிடமும் ஊக்க மருந்து சோதனையை நடாத்த சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) முடிவு செய்துள்ளது.

இதற்காக சைக்கிளிங் மற்றும் தடகளப் போட்டியில் பயன்படுத்தப்படும் பயா லொஜிக்கல் பாஸ்போர்ட் முறையை கால்பந்து போட்டிகளிலும் சர்வதேச சம்மேளனம் அறிமுகம் செய்கிறது. அதன்படி வீரர்களின் இரத்தம், சிறுநீர் மாதிரி என பல விபரங்கள் அவர்கள் விளையாடும் காலம் முழுவதும் சேகரிக்கப்பட்டு வைக்கப்படும்.

மேலும் போட்டிகளில் பங்கேற்காத நேரங்களிலும் இந்தச் சோதனை நடாத்தப்படும். இதனால் தவறு செய்யும் வீரர்கள் சிக்குவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. கடந்த மார்ச் மாதம் முதல் பிபா வைத்தியர்கள் குழு சர்வதேச வீரர்களிடம் சோதனை நடாத்தி வருகிறது. கடந்த வாரம் ஆர்ஜென்ரீனா பயிற்சி முகாமுக்கு சென்ற இந்தக் குழு மெஸ்சியிடம் ஊக்க மருந்து சோதனை நடாத்தியது.

கடந்த ஆண்டு நெய்மர் (பிரேசில்), பபூன் (இத்தாலி), இனியஸ்டா (ஸ்பெயின்) போன்ற முன்னணி வீரர்களிடம் ஊக்க மருந்து சோதனை நடாத்தப்பட்டது. போட்டி நடைபெறும் தினங்களில் சுழற்சி முறையில் அனைத்து வீரர்களும் சோதனை செய்யப்படுகிறார்கள். கடந்த காலங்களில் கால்பந்து ஜாம்பவானான டிகே மரடோனா ஊக்க மருந்தில் சிக்கினார். 1994ஆம் ஆண்டு உலக கோப்பையில் ஊக்க மருந்து பயன்படுத்தியதால் வெளியேற்றப்பட்டார். 2001ஆம் ஆண்டு நெதர்லாந்து வீரர்கள் டெகர் டேவிஸ், பிராங் டிபோயர் ஜோன் ஸ்டாம் ஆகியோர் நன்ட்ரோலின் எனும் போதை மருந்து பயன்படுத்தி சிக்கிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் 15 வயதுப் பிரிவு அணிக்கு நேற்று முன்தினம் பாடசாலைச் சமூகத்தால் கௌரவிப்பு நிகழ்வு நடாத்தப்பட்டது. பாடசாலை அதிபர் அருட் சகோதரி மேரிலாசரஸ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில், கபடி அணியின் வீராங்கனைகள் மற்றும் அதன் பயிற்றுவிப்பாளர்களான கே.ஜெயராஜ் செல்வி. நிசாந்தினி ஆகியோர் பான்ட் வாத்தியத்துடன் பாடசாலை மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு, கௌரவிப்பு நிகழ்வு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா, வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி குணபாலசிங்கம் கோசலை, பண்டத்தரிப்பு பங்கு அருட்தந்தை எஸ்.நேசரத்தினம் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (48)



# இறுதியில் பலப்பரீட்சை

(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஷரபோவா மற்றும் சிமொனா ஹலெப் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் பரிஸில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா கனடாவின் யூகுனி பவுச்சர்ட்டை 4-6, 7-5, 6-2 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

அதேபோல் மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ரொமேனியாவின் சிமொனா ஹலெப் ஜேர்மனியின் ஆண்டிரியா பெட்கோவிக்கை 6-2, 7-6 என்ற செட்கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இது வரை பல்வேறு கிராண்ட்ஸ்லாம் கோப்பைகளை கைப்பற்றியுள்ள ஷரபோவா தற்போது 5ஆவது கிராண்ட் ஸ்லாம் கோப்பையை கைப்பற்றுவதில் தீவிரமாக இருக்கிறார்.

மற்றொரு பக்கம் முதன் முறையாக கிராண்ட்ஸ்லாம் போட்டியின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள சிமொனா ஹலெப்பும் இம்முறை கோப்பையை கைப்பற்ற வேண்டும் என்று தீவிர கவனம் செலுத்தி வருகிறார். ஆக இறுதிப்போட்டியில் விறுவிறுப்பிற்கு பஞ்சம் இருக்காது என்றே தோன்றுகிறது.



# இங்கிலாந்து டெஸ்ட் அணி

(லண்டன்)

இலங்கை அணிக்கெதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளன. இப்போட்டித் தொடருக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

12 பேர் கொண்ட இங்கிலாந்து அணி விபரம்: குக், எம். அலி, ஜேம்ஸ் அண்டர்சன், கரி பலன்ஸ், இயன் பெல், ஸ்ரூவெர்ட் புரொட், கிறிஸ் ஜோர்டன், லியம் பிளங்கெட், மட் பிரையர், சாம் ரொப்சன், ஜோ ரூட், கிறிஸ் வோக்ஸ்.

# பங்களாதேஷ் அணி அறிவிப்பு

(டாக்கா)

இந்திய அணிக்கெதிரான மூன்று போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15,17,19ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் அணி விபரம் வருமாறு: முஷ்பிகுர் ரஹிம் (கப்டன்), தமிம் இக்பால், அனமுல் ஹக், ஷம்சூர் ரஹ்மான், மொமினுல் ஹக், ஷகிப் அல்ஹசன், நசிர் உசைன், மொகமதுல்லா, மிதுன் அலி, அப்துர் ரசாக், மோர்தாசா, சோஹக் காஜி, ஜியார் ரஹ்மான், அல்அமின் உசைன், தாஸ்கின் அகமட்.

# இன்றைய ஆட்டங்கள்

(சுன்னாகம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. அணிக்கு ஆறு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி ஐந்து ஓவர்களாக நடைபெறவுள்ளன. (48)

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இன்றைய தினம் மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதில் ஜொலிஸ்ரார் எதிர் தெல்லிப்பளை யூனியன், மானிப்பாய் பரிஷ் எதிர் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி, தெல்லிப்பளை கிறாஸ் கோப்பர்ஸ் எதிர் திருநெல்வேலி அணிகள் மோதவுள்ளன.

# தென்மராட்சியில் மென்பந்து கிரிக்கெட்

(கைதடி)

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக்கழகம் அமரர் யோகேஸ்வரன் நியாந்தன் ஞாபகார்த்த மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை விரைவில் நடாத்தவுள்ளது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி ஐந்து ஓவர்களாக நடைபெறவுள்ளதாகவும் இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளை நாளை மாலை 5.00 மணிக்கு முன்னர் 0766597522 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (11)




## கால்பந்து திருவிழா இன்னும் 5 நாட்கள்



ரொனால்டோ

# உலக கால்பந்தாட்ட விழா வெல்லப்போகும் அணி எது?



எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்


## போர்த்துக்கல் சிறு பார்வை

போர்த்துக்கல்1 கோடி மக்கள் தொகை கொண்ட நாடு. 1934ஆம் ஆண்டிலிருந்து தகுதி காண் போட்டிகளில் பங்கு பற்றி வந்தாலும் 1966 இலேயே முதன் முதலில் உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்றதுடன் 3ஆம் இடத்தையும் பெற்றது. அதன் பின்னர் 1986இல் மீண்டும் உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்றது. பின்னர் 2002 இல் இலிருந்து தொடர்ந்து 4ஆவது தடவையாக இம்முறையும் தகுதி பெற்றுள்ளது. FIFA இன் சர்வதேச தர வரிசைப்படுத்தலில் தற்போது 3ஆம் இடத்திலுள்ளது. 2010இல் இலிருந்து தரப்படுத்தலில் அடைந்த முன்னேற்றத்தின்படி பார்க்கும்போது,

இம்முறை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. முன் களத்தின் இடது கரையிலிருந்து வலது கரை வரை, இரசிகர்கள் வியக்கும் வகையில் சிறப்பாக விளையாடக்கூடிய, 29 வயது முன் கள வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ (Christiano Ronaldo) அணிக்குத் தலைமை தாங்குகிறார். 2010 இலும் இவரே அணிக்குத் தலைமை தாங்கினார். கோல் போடுவதில் வல்லவரும், உலகின் தலைசிறந்த தற்போதைய வீரர்களில் ஒருவருமான இவர் விளையாடும் மூன்றாவது உலக கிண்ணம் இதுவாகும். 32 வயது நடு பின் கள வீரர் புறூனொ அல்வெஸ் (Bruno Alves) கடந்த உலகக் கிண்ணத்திலும் சிறப்பாக விளையாடியவர். 22 வயது, நடு மத்திய கள வீரர் வில்லியம் காவெலோ (William Carwelho) வும்குறிப்பிடத்தக்கவராவார். 44 வயதான போலோ பென்ரோ (Paulo Bento) அணியின் பயிற்சியாளராவார். இவர்களது அணி அமைப்பு 4 - 3 - 3 ஆகும்.

# இருதரப்பிலும் இதயசுத்தி இருக்கிறதா?

– சுகு–ஸ்ரீதரன் –



தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமை உண்மையில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விரும்புகிறதா? உணர்ச்சிகளுக்கு இடமளியாமல் யதார்த்தமாக தமிழர்களின் இருப்பை - சுயமரியாதை கண்ணியத்துடன் ஒரு வாழ்வை உறுதி செய்ய விரும்புகிறதா?

அல்லது உணர்ச்சியூட்டும் யதார்த்தமல்லாத நாடகபாணியிலான அதே மாமூலான அரசியலை நடத்த விரும்புகிறதா? தமிழ் மக்களின் வாழ்வு இந்த மண்ணில் சிறப்பாக அமைய வேண்டும் என்ற அக்கறைகள் இருக்கின்றனவா?

அதேபோல் இலங்கையின் சமூக வாழ்வின் சகல அம்சங்களிலும் தமிழர்கள் சிறுபான்மையினர் சமத்துவமாக வாழ்வதற்கான அக்கறைகள் இலங்கையின் ஆட்சி அதிகார மட்டத்தில் இருக்கிறதா? அல்லது சிறுபான்மை மக்களை நிரந்தரமாக விரட்டிக் கொண்டும் அச்சுறுத்திக் கொண்டும் கீழ்ப்படிவை உறுதிப்படுத்திக் கொண்டும் இருக்க வேண்டும் என்ற காலம் காலமான பேரினவாத நிலைப்பாட்டில் தான் யுத்தம் முடிவடைந்த 5 ஆண்டுகளின் பின்னரும் இருக்கிறார்களா?

தமது தேர்தல், அதிகார வெற்றிகளுக்கு இந்த இனமேலாண்மை அரசியல் தான் உதவும் என்று கருதுகிறார்களா?

இன ரீதியாக மனோரீதியாக இந்த நாடு பிளவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பது சந்தேகத்திற்கிடமற்ற உண்மையாகும்.

இந்த பிளவில் அரசியல் இலாபம் பார்க்கும் தொழிலே இங்கு நிகழ்கிறது.

இருதரப்பிலுமே அரசியல் சொற்சிலம்பங்களில் - வாய்ப்பந்தல்களில் இருக்கும் அக்கறை பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் இல்லை.

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் தொடர்பாக மாத்திரம் அல்ல, நாடு பூராவும் சகல தரப்பு மக்களின் ஜனநாயக உரிமைகளும் களவாடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இனவாத அரசியல் இதனை மூடி மறைக்க பயன்படுத்தப்படுவது ஒன்றும் புதிய சமாச்சாரம் அல்ல.

உண்மையில் நிகழவேண்டியது ஜனநாய சூழமைவைக் கொண்ட சமத்துவமான சமூக பொருளாதார அபிவிருத்தி.

இன சமூகங்களின் பிரச்சினைகளுக்கு ஜனநாயக வழிகளில் தீர்வுகாண்பதும், இராணுமய சூழலை அகற்றுவதும், மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான இடைவெளிகளை உருவாக்குவதும், இலங்கையின் சமூக பொருளாதார ஏணியின் அடிமட்டத்தில் உழலும் மக்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்துவதும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஏற்படுத்துவதும், பாதுகாப்பான அச்சமற்ற வாழ்வை உருவாக்குவதும் ஒரு ஜனநாயக அரசின் கடமை.

குறிப்பாக தமிழ் - முஸ்லிம் - மலையக மக்கள் பெருமளவில் அங்கம் வகிக்கும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தேசிய வாழ்வில் சிறுபான்மைச் சமூகங்கள் இணைந்து கொள்வதற்கான தடைகளை அகற்ற உதவும்.

அதிகாரத்தில் சிறுபான்மையினர் பங்குபற்றுவதற்கான உரிமையை மறுத்து வந்ததே இலங்கையில் பேரழிவுச் சூழ்நிலை உருவாகுவதற்கு வித்திட்டது

நாம் அசுர பலம் கொண்டவர்கள், யாரையும் இலட்சியம் செய்யத் தேவையில்லை என்ற மமதை பல சந்தர்ப்பங்களில் அனர்த்தங்களை விளைவித்திருக்கிறது. இது வரலாற்று அனுபவமும் கூட.

மறுபுறம், தீர்க்கதரிசனமில்லாத தமிழ்த் தலைமைகளால் அன்று தவறவிட்டதை மீண்டும் ஓடிப்பிடிக்க வேண்டியிருக்கிறது.

1980களின் பிற்பகுதியிலேயே தமிழ்த் தலைமைகள் ஒற்றுமையாக புத்திபூர்வமாக தீர்க்க தரிசனமாக நடந்திருந்தால் பின்னரான கால் நூற்றாண்டுகால பேரழிவுக்கும், இன்றைய அலைச்சலுக்கும், அவமானங்களுக்கும், கெஞ்சல்களுக்கும், அவலத்திற்கும், சிதில மடைந்த நிலைக்கும் இடமிருந்திருக்காது.

13ஆவது திருத்தத்தின் கீழான மாகாண அதிகாரங்களை உறுதிப்படுத்துமாறு இந்தியாவின் புதிய பிரதமர் மோடி இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் தாம் பதிவியேற்ற மறுநாளே கேட்டுள்ளார்.

கடந்த கால்நூற்றாண்டுகளாக இந்திய நடுவண் அரசால் வலியுறுத்தப்பட்டு வருவதையே இந்தியாவின் புதிய அரசம் வலியுறுத்தியுள்ளது.

எனவே தீர்வை உறுதிப்படுத்துவதற்கு தமிழ் மற்றும் இலங்கை அரச தலைமைகள் செயற்படவேண்டிய தருணமிது.

அதிகாரப் பகிர்வை ஆதரிக்கும் - இனமத விரோதப்போக்குகளை இராணுவமயமாக்கல் மற்றும் எதேச்சாதிகாரத்தை நிராகரிக்கும் - முற்போக்கு அரசியல் சக்திகள் தென்னிலங்கையில் பரவலாக காணப்படுகின்றன.

இவற்றுடன் தமிழர்களின் - சிறுபான்மை சமூகங்களின் அரசியல் தலைமைகள் உறவுகளைப் பலப்படுத்த வேண்டும். பேசுவதற்காகக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அனைத்தும் கட்டாயம் பயன்படுத்தப்பட வேண்டியவை. பேசும் வாய்ப்புகளைத் தவறவிடுவதானது மறைமுகமாக வன்முறையை நம்புபவர்களின் உள்ளக் கிடைக்கையையே வெளிப்படுத்தும்.

இனப்பிரச்சினை தீர்வு என்பது இலங்கையின் அரசியல் தளத்தை ஜனநாயக மயப்படுத்துவதுடனும் இணைந்தது.



# நீங்கள் மதுவுக்கு அடிமையா?

நீங்கள் மதுப் பழக்கத்திற்கு அடிமையா, இல்லையா என்பதை தெரிந்து கொள்ள, கீழ்க்கண்ட கேள்விகளுக்கு உண்மையான பதில் அளியுங்கள்:

1. உங்களது குடிப்பழக்கத்தால், உங்களது குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியிழந்து விட்டதா?

2. குடிப்பதால், உங்கள் பணி நேரம் குறைந்து விட்டதா?

3. உங்களது குடிப்பழக்கம், உங்கள் பெயர், புகழுக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளதா?

4. குடிப் பழக்கத்தால், பணக் கஷ்டம் ஏற்பட்டுள்ளனவா?

5. மோசமான சுற்றுச் சூழலில், உங்களைவிட தகுதி குறைந்த நபர்களோடு சேர்ந்து குடிக்குமளவிற்கு மாறி விட்டீர்களா?

6. நீங்கள் குடிப்பதால், குடும்ப நலனை கவனிக்க, பராமரிக்க முடியவில்லையா?

7. கவலைகள், பிரச்சினைகளிலிருந்து தப்பிப்பதற்காக குடிக்கிறீர்களா?

8. தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குடிக்க வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்படுகிறதா?

9. குடிப்பழக்கம் காரணமாக, தூங்குவதில் சிரமம் உள்ளதா?

10. குடிப்பழக்கத்தால் உங்கள் திறமைகளும், இலட்சியங்களும், ஆர்வங்களும் குறைந்து வருகிறதா?

இந்த, 10 கேள்விகளில், ஒரேயொரு கேள்விக்கு மட்டும், “ஆம்“ என்று, நீங்கள் பதிலளித்தால், நீங்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கலாம் அல்லது மிக விரைவில் அடிமையாகி விடுவீர்கள். இரண்டு கேள்விக்கு, “ஆம்“ என்ற பதிலளித்தால், நீங்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமை.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளுக்கு, “ஆம்“ என்று பதிலளித்தால், எவ்வித சந்தேகமும் இன்றி, நிச்சயமாக நீங்கள் குடிப்பழக்க அடிமை தான்.

இந்த, 10 கேள்விகளில் எந்தக் கேள்வியும் உங்களுக்குப் பொருந்தவில்லை எனில், நீங்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையில்லை; ஆனால், அடிமையாகி விடாமல், உங்களைத் தற்காத்துக் கொள்ளுங்கள்.

(‘பிளிட்ஸ்’ இதழிலிருந்து)

# வெற்றி நமக்குத்தான்!



இரு நாட்டுப் படைகளுக்கும் இடையே வெகு மும்முரமாக சண்டை நடந்து கொண்டிருந்தது.

எதிரி நாட்டுப் படையிடம் கிட்டத்தட்ட தோற்றுவிட்ட நிலை. ஆனாலும் தாய்நாட்டுப் படைத் தளபதிக்கு போரை இழக்கமாட்டோம் என்ற அசாத்திய நம்பிக்கை. ஆனால் துணைத் தளபதி உள்ளிட்ட அவன் வீரர்களுக்கு அந்த நம்பிக்கை சிறிதும் இல்லை. எல்லோரும் ஓடுவதில் குறியாக இருந்தனர்.

என்னதான் நம்பிக்கை இருந்தாலும், வீரர்களில்லாமல் தனி ஆளாய் என்ன செய்ய முடியும்?

கடைசி நாள் சண்டை.

போர்க்களத்துக்குப் போகும் வழியில் ஒரு கோயிலைக் கண்டார்கள்.

உடனே தளபதி வீரர்களை அழைத்து, “சரி வீரர்களே” நாம் ஒரு முடிவுக்கு வருவோம். இதோ இந்தக் கோயிலுக்கு முன் ஒரு நாணயத்தைச் சுண்டி விடுகிறேன். அதில் தலை விழுந்தால் வெற்றி நமக்கே. பூ விழுந்தால் நாம் தோற்பதாக அர்த்தம். இப்படியே திரும்பி விடுவோம்... வெற்றியா...? தோல்வியா...? நமக்கு மேல் உள்ள இந்த சக்தி தீர்மானிக்கட்டும்... சரியா?...

“ஆ.. நல்ல யோசனை” அப்படியே செய்வோம்...

நாணயத்தைச் சுண்டினான் தளபதி. காற்றில் மிதந்து, விர்ரென்று சுழன்று தரையில் விழுந்தது நாணயம்.

தலை...!

வீரர்கள் உற்சாகத்தில் 'மிதந்தனர். வெற்றி வெற்றி என்று எக்காளமிட்டபடி போர்க்களம் நோக்கி ஓடினர். வெகு வேகமாக சண்டையிட்டனர் எதிரி நாட்டவர்களோடு.

அட.. என்ன ஆச்சர்யம். அந்த சிறிய படை, எதிரி நாட்டின் பெரும் படையை வீழ்த்திவிட்டது!


துணைத் தளபதி வந்தான். “நாம் வென்றுவிட்டோம்” கடவுள் தீர்ப்பை மாற்ற முடியாதல்லவா... என்றான் உற்சாகத்துடன்.

“ஆமாம்” உண்மைதான்... என்படி அந்த நாணயத்தை துணைத் தளபதியிடம் கொடுத்தான் தளபதி.

அந்த நாணயத்தின் இரு பக்கங்களிலும் தலை!

# எண்ண அலைகளின்றி பயத்தைப் பார்க்க முடியுமா?

- ஜே.கிருஷ்ணமூர்த்தி -



உண்மையிலேயே எதையும் அறிந்து கொள்ள தீவிர ஆர்வமுடையவராக நான் இருந்தால், ஏன் இத்தனை உணர்வுநிலை பயங்களும் ஆழ்மனப் பயங்களும் உள்ளன என்பதைக் கண்டறிய விருப்பம் கொள்வேன். ஏன் இந்தப் பயம் வந்தது, இந்தப் பயத்தின் மையக் காரணி எது என்ற கேள்விகளோடு சுய விசாரணை செய்வேன். எப்படி விசாரணை செய்வது என்பதை இங்கு உங்களுக்குச் சுட்டிக்காட்ட முயற்சி செய்கிறேன்.

என் மனம், நான் பயப்படுகிறேன் என்பதை அறிவேன் என்று சொல்கிறது. இருட்டைப் பார்த்தால் பயம், தண்ணீரைப் பார்த்தால் எனக்குப் பயம். நான் உயரமாய், அழகாய் இருக்க வேண்டும் என்று ஆசை ஆனால், அப்படி இல்லையே- அதனால் பயம். நான் இப்போது அவற்றைப் பற்றி விசாரணை செய்து கொண்டிருக்கிறேன். ஆக, எனக்கு நிறைய பயங்கள் உள்ளன. ஆழ்மனப் பயங்களும் மேலோட்டமான பயங்களும் எனக்கு இருக்கின்றன என்பதும் எனக்குத் தெரியும். அவை இரண்டைப் பற்றியும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவை எப்படி இருப்பு கொள்கின்றன, அவை எப்படித் தோன்றுகின்றன, அவற்றின் வேராக இருப்பது எது என்பது போன்ற கேள்விகளுக்கு விடை காண முற்படுகிறேன்.

பயத்தைப் பற்றி எப்படி அறிந்துகொள்வது? பயத்தைப் பற்றிய ஆய்வில், ஒவ்வொரு படியாக மெதுவாக ஏறி முன்னேறப் பார்க்கலாம். முதல் படியாக, பயந்துகொண்டு வாழ்வது என்பது மன இறுக்கத்தோடு பதற்றத்தோடு இருப்பது மட்டுமல்ல, மிகுந்த அழிவையும் அது கொண்டு வருகிறது என்ற உண்மையை மனம் முதலில் பார்க்க வேண்டும்.

நான் மன இறுக்கத்துடன் இருப்பதையும், அதன் காரணமாக, பதற்றமான செயல்பாடுகள் தொடர்வதையும் அவை அழிவைக் கொண்டு வருவதையும் மனம் பார்க்க வேண்டும். பயந்து போயிருக்கும் மனம், ஒருபோதும் நேர்மையாக நடந்து கொள்ளாது. கெட்டியாகப் பற்றிக் கொள்ள ஏதோ ஒரு அனுபவத்தை அல்லது ஒரு கற்பனையைக் கண்டுபிடித்து, பயந்த மனம் அதைப் படித்துக் கொள்ளும். ஆக, பயம் இருக்கும்வரை, துன்பம் இருக்கும் என்பதை முழுமையாக, தெளிவாக நான் பார்க்க வேண்டும். நீங்கள் அவ்வாறு பார்க்கிறீர்களா? அவ்வாறு பார்த்தல், முதல் தேவையாக இருக்கிறது. அதுவே முதலாம் உண்மையாகவும் இருக்கிறது. பயம் இருக்கும் வரை, இருள் இருக்கும்; இருளில் இருந்துகொண்டு நான் செய்வதெல்லாம் இருளாகவே இருக்கும், குழப்பமாகவே இருக்கும். இவ்வுண்மையைத் தெளிவாக, முழுமையாக நான் பார்க்கிறேனா?

ஏற்றுக்கொள்வதோ மறுப்பதோ பிரச்சினை இல்லை. நீங்கள் இருட்டில் வாழ்கிறீர்க்ள் என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா? ஆமோதித்தீர்களென்றால், அதனுடன் வாழுங்கள். நீங்கள் போகுமிடமெல்லாம் இருளைச் சுமந்து செல்கிறீர்கள். இருளில் வாழ்கிறீர்கள், அவ்வளவுதான்.

# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர்

6

- கமெலியா நாதானியேல் -


கனடாவில் எல்.ரீ.ரீ.ஈ யின் நிழல் தலைவரான நீதன் சண்முகராஜா, ஐ.நா பாதுகாப்பு சபை தீர்மானம் 1373 ன் கீழ் பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ள தமிழ் இளையோர் அமைப்பு (ரி.வை.ஓ), தமிழீழ தேசிய சபை(என்.சி.சி.ரி) என்பனவற்றை இயக்கும் முக்கிய பதவிகளில் உள்ளார்.

தன்னை மறைத்துக் கொள்வதில் மிகவும் கெட்டிக்காரான அவர், தேர்தல்களில் போட்டியிடுவதற்கு புதிய ஜனநாயகக் கட்சி வேட்பாளராக நியமனம் பெற்றதிலிருந்து அதிகாரிகளின் கவனத்தின் கீழ் வந்துள்ளார். கடந்த காலங்களில் அவர் வெற்றி பெறவில்லை, ஆனால் இந்த முறை கனடாவிலுள்ள அனைத்து எல்.ரீ.ரீ.ஈ இயந்திரங்களையும் அவர் தனக்கு ஆதரவாக அணி திரட்டியுள்ளார்.

நீதன் சண் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர், அவரது தந்தை நெடுந்தீவையும் தாய் அனலைதீவையும் சேர்ந்தவர்கள், அவர் தனது 16ஆவது வயதில் கனடாவுக்கு வந்தார். கனடாவிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ யினரால் தீவிரமயமாக்கப்பட்ட அவர், ஒரு இளையோர் பணியாளர், ஆசிரியர் ஆக பணி புரிந்து, ஒரு பாடசாலை சபை அறங்காவலர் ஆகியதன் மூலம் கல்வி அமைப்புக்குள் ஊடுருவி பின்னர் கனடாவின் அரசியல் அமைப்புக்குள்ளும் ஊடுருவியுள்ளார்.

ஒரு இளைஞர் பணியாளராக தனது முதல் வேலையை ஆரம்பித்த நீதன், கல்வி நிலையங்களிலும் எல்.ரீ.ரீ.ஈ யின் கொடி முக்கியமாக காட்சிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை எழுப்பியதன் மூலம் பிரபலமானார். புலிக்கொடி தங்கள் பாரம்பரியச் சின்னம் என்று மாணவர்கள் நம்புவது இன்று மரபாகி விட்டது. சமீபத்தில் கனடாவில் வாழும் இலங்கை வம்சாவழியை சேர்ந்த ஒரு மாணவன் தனது உடலை புலிக் கொடியால் போர்த்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றுள்ளான்.

பிரசாரத்தில் நிபுணரான நீதன், எல்.ரீ.ரீ.ஈக்கு சொந்தமான தமிழ் விஷன்






இன்ரநஷனல், மற்றும் சி.எம்.ஆர் ஆகிய இரண்டு ஊடகங்களிலும் நிகழ்ச்சிகளை தயாரித்தும், அனுசரணை வழங்கியும் அரங்கேற்றியுள்ளார். 2009 மே, மாத ஆரம்பத்தில், எல்.ரீ.ரீ.ஈ தனது கடைசி நாட்களில் இருக்கிறது என்று வெளிப்படையானபோது, மொன்ரியலில் எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள் மற்றும் அனுதாபிகள் கூடியிருந்த ஒரு கூட்டத்தில் உரையாற்றினார்.

"நான் ஒரு முக்கியமான கேள்விக்கு பதில் சொல்ல விரும்புகிறேன், அந்தக் கேள்விக்கான பதில் உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்போது எங்கள் போராட்டம் முன்னெப்போதையும் விட வலுவாக உள்ளது, எங்கள் போராட்டத்தைத் தொடர நாங்கள் எப்போதும் தயாராக உள்ளோம், எங்கள் விடுதலைப் போராளிகளை தடுப்பதற்கில்லை, உங்களது வெற்றி இந்த புலிக்கொடி உயரப் பறப்பதிலேயே உள்ளது" என்று சொல்லி ஏமாற்றினார்.

கனடாவில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள் இலங்கை மோதலில் கனடா தலையிட வேண்டும் என்று கோரிக்கை எழுப்பி ஆர்ப்பாட்டங்களை நடத்தியபோது, எல்.ரீ.ரீ.ஈ யின் கொடியையும் மற்றும் பிரபாகரனின் படத்தையும் ஏந்திச் செல்லும்படி நீதன் அவர்களை வற்புறுத்தினார். "எங்கள் கொடி தடை செய்யப்பட்ட ஒன்று என்று பெடரல் அரசாங்கம் சொல்கிறது. மாகாணச் சட்டம் மற்றும் காவல்துறை என்பன எங்கள் கொடி சட்ட ரீதியானது தடை செய்யப்பட்டது அல்ல என்று சொல்கிறது. அப்படியாயின் எங்கள் கொடிகளை வீட்டில் வைத்துவிட்டு வரும்படி எப்படி அவர்கள் கேட்க முடியும்? அப்படிக் கேட்க அவர்களுக்கு என்ன உரிமை உள்ளது? அது ஜனநாயகத்துக்கு எதிரானது இல்லையா? எங்கள் ஜனநாயக உரிமைகளை பெறும் வரை மற்றும் எங்கள் சுதந்திரம் அங்கீகரிக்கப்படும் வரை எங்கள் சுதந்திர சின்னமான புலிக்கொடியை நாங்கள் விட்டுவிடத் தயாரில்லை" என்று நீதன் தனது கருத்தை பகிர்ந்து கொண்டார்.

கனடிய பிரபாகரன் என்கிற பட்டப் பெயரையுடைய நீதன் வெளிநாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ ஆதரவாளர்கள் மிகவும் தீவிரமான பங்கினை ஆற்றவேண்டும் என்று வாதாடினார். "உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவரும் இப்போது ஒன்றாக ஒருமித்து நிற்கிறோம். இந்தியாவில் (தமிழ்நாடு) உள்ள எங்களது சகோதர சகோதரிகளும் விடுதலைக்கான இந்தப் போராட்டத்தில் எங்களுடன் உள்ளார்கள். இந்த நாட்டில் அரசியலை கட்டளையிடக்கூடிய ஒரு கட்டத்தில் நாங்கள் உள்ளோம். தமிழ் ஈழம் என்கிற வார்த்தையை உச்சரிப்பவர்களுக்கு மட்டுமே எங்கள் வாக்குகள் சென்று சேரும் (கூட்டம் ஆர்ப்பரிக்கிறது). எமது போராளிகள் எங்கள் தாய் நாட்டிற்காக விடாமுயற்சியுடன் போராடுகிறார்கள், அதேபோல இங்கேயே பிறந்து வளர்ந்த எங்கள் பிள்ளைகளும் எங்கள் போராட்டத்தில் இணைந்து போராட்டத்தை தங்கள் கரங்களில் எடுத்துக் கொண்டுள்ளார்கள். இதில் நான் கனடாவை மட்டும் குறிப்பிடவில்லை, ஐரோப்பாவில், அவுஸ்ரேலியாவில், மற்றும் இங்கிலாந்தில் பிறந்தவர்களையும்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன்".

கனடிய அரசியலில் நீதனது ஆட்டம் 2002இல் ஆரம்பமானது. மார்க்கம் நகர வட்டாரம் 7 மற்றும் 8 க்கான தேர்தலில் போட்டியிட்டார், ஆனால் தோல்வியடைந்தார். 2006இல் அவர் திரும்பவும் போட்டியிட்டு வென்றார். 2007இல் நீதன் கட்சி மாறி மாகாண புதிய ஜனநாயகக் கட்சி(என்.டி.பி) யில் இணைந்து ஸ்கார்பொரோ - கில்வூட் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். 2010இல் ஸ்கார்பொரோ ரூஜ் றிவர் பகுதிக்கு நகர்ந்து நகர கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட்டார், அதிலும் அவர் தோற்றார்.

2011இல் நீதன் என்.டி.பி யின் வேட்பாளராக மீண்டும் போட்டியிட்டு திரும்பவும் தோற்றார். இந்த முறை அவர் கடுமையான எதிராளிக்கு முகம் கொடுக்கவேண்டி உள்ளபோதும் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் தேர்தலில் அவர் ஸ்கார்பொரோ ரூஜ் றிவர் பகுதியில் என்.டி.பி வேட்பாளராக போட்டியிடுகிறார்.

பொங்கு தமிழ் எழுச்சி நாளில், உலகத் தமிழர் இயக்கத்தை தடை செய்ததுக்காக கனடிய அரசாங்கத்துக்கு சவால் விடுத்தார். புலிக்கொடியினை காட்சிப்படுத்தி, தடைக்கு எதிராக நீதன் ஆர்ப்பாட்டம் நடத்தினார். கனடிய அரசாங்கத்தை நோக்கி "இந்தப் படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா?" என அறைகூவினார். அதைக் கேட்டு பாாவையாளர் கூட்டம் கைதட்டி ஆர்ப்பரித்தது.

மே,2009இல் எல்.ரீ.ரீ.ஈ முடிவுக்கு வந்த பின்னர், நெடியவன் என்கிற பேரின்பநாயகம் சிவபரன் கனடாவில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கு புத்துயிர் கொடுப்பதற்காக அணி ஒன்றை நியமித்தார். 2010இல் கனடிய தமிழர் தேசிய சபை (என்.சி.சி.ரி) உருவாக்கப்பட்டது. என்.சி.சி.ரியின் உப தலைவராக நீதன் சண் நியமிக்கப் பட்டார்.

2012இல் ஒன்ட்டாரியோவின் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ள நீதன் சண், வரப்போகும் தேர்தலில் வெற்றி வாகை சூட உறுதி பூண்டுள்ளார்.

(தொடரும்)

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# முடிவற்ற பிரிவுகளுக்கு முரண்பாடுகளே மூலகாரணம்

**இந்த வாழ்வியலில் வெற்றி என்பது எது தெரியுமா? நாலுமனிதர்களை சந்தோசப்படுத்தி நாமும் சந்தோசமாக வாழ்வதுதான்.**

தற்கால எமது சமூகத்தில் பிரச்சினைகளால் உண்டான பிரிவுகளிற்கப்பால் முரண்பாடுகளால் உண்டான பிரிவுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முரண்பாடு என்றால் என்ன?... என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். பிரச்சினை என்பது வேறு முரண்பாடு என்பது வேறு?

**பிரச்சினை என்றால் என்ன?**

இருதுருவ கருத்துப்பரிமாற்றத்தில் ஒரு துருவத்தில் மாத்திரம் சரியான நியாயம் இருக்கும்போது உருவாவது பிரச்சினையாகும். இதனைத் தீர்ப்பது சுலபம். தவறினைச் சுட்டிக்காட்டி திருத்துவதற்கான சந்தர்ப்பத்தினை அளிப்பதன் மூலம் இதற்கு தீர்வு கிட்டும்.

**முரண்பாடு என்றால் என்ன?**

இருதுருவ கருத்துப் பரிமாற்றத்தில் ஒருதுருவத்தில் மாத்திரம் அன்றி இரு துருவத்திலும் சரியான நியாயம் இருக்கும் போது உருவாவது முரண்பாடாகும். இதனைத் தீர்ப்பது கடினம்.

முரண்பாடுகள் முற்றிய நிலையில் பிரச்சினைகளாக உருவெடுக்கலாம். சரியான நியாயங்கள் சமபக்கங்களிலும் இருக்கும்போது சகலரும் வாதப்பிரதிவாதங்களை அத்துமீறிச் செல்லும்போது தவறுகள் ஒருதுருவத்தில் மலிந்துகாணப்பட அது பிரச்சினையாக உருவெடுக்கும். இதனால் ஏற்படும் பிரிவுகளை விட முரண்பாடுகளால் தற்போது ஏற்படும் குடும்பப் பிரிவுகளே அதிகமாகக் காணப்படுகின்றது. இதுமிக வேதனைக்குரிய ஒன்று நிரந்தர பிரிவுகளுக்குட்பட்டு நிர்க்கதியான பல குடும்பங்களின் பிரிவிற்கான காரணங்களை ஆய்வுசெய்த போது முடிவற்ற பிரிவுகளுக்கு முரண்பாடுகளே மூலகாரணமென்பது தெளிவாகியுள்ளது. சரியான நியாயங்கள் இரு பக்கங்களிலும் உள்ள போது புரிந்துணர்வு இன்மையென்ற ஒரேயொரு காரணம் மாத்திரமே குடும்ப உறவுகளைப் பிரித்திருக்கின்றதென்றால் மனிதனுக்குப் பகுத்தறிவைப் படைத்த இறைவன் கூடப்பாவியாகின்றான்.

அநாவசியமான பிரிவுகள் இன்றைய குடும்ப உறவுகளை ஆழ்கின்றது. இதற்கான பல காரணங்கள் இன்றைய ஆய்வுகளில் முன்மொழியப்பட்டுள்ளன. இதனை ஒவ்வொருவரும் புரிந்து செயற்பட வேண்டிய கட்டாய தேவை தற்போது உருவாகியுள்ளது.

**சேவைகள்**

தொடர்பாடல் உட்பட மனிதனின் அனைத்து ஒருங்கிணைவிலும் தேவைகள் பரிமாறப்படவேண்டும். எப்படி வார்த்தைகளை வடிவமைப்பது என்று சிந்திக்கும் எம்மவரில் பலர் அடுத்தவரின் தேவைகளைப் புரிந்து தொடர்பாடல்களை மேற்கொள்வதில்லை. இதனால் தான் பலமுரண்பாடுகள் எமை முற்றுகையிடுகின்றன. பிறந்து மடியும் இந்தப் பூவுலக வாழ்வியலில் நாம் சம்பாதிப்பது நாலு சொந்தங்களை மாத்திரமே. எதையும் பேசலாம் என்பதற்கப்பால் எதைப் பேசலாம் என சிந்திக்கவேண்டும். யாரோடு பேசுகின்றோம் எனச் சிந்திக்க வேண்டும். எந்த நேரத்தில் பேசுகின்றோம் எப்படிப் பேசுகின்றோம எனச் சிந்திக்கவேண்டும். இவை யெல்லாம் முரண்பாடுகளுக்கு முடிவு கட்டும் தொடர்பாடல் திறன்களாகும்.

**விட்டுக்கொடுப்புக்கள்**

எம்மவரில் குறிப்பாக யாழ்ப்பாணத்தவரில் குறைந்து காணப்படும் ஓர்விடயம் இதுவே குடும்பங்களில் ஏற்படும் பல முரண்பாடுகளுக்கு அடிப்படைக் காரணம் இதுவே, நீதிமன்றங்களில் கொடுக்கப்பட்ட விவாகரத்துக்களுக்கு அடிப்படைக்காரணம் இதுவே, எம்மால் மாற்ற முடியாததும் ஏற்றுக் கொள்ள முடியாததும் இதுவே. இந்த மனிதவாழ்க்கையில் எது எமக்கென்று உள்ளது?... சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் ஏதேதோ பேசுகின்றோம் எதற்காகவோ எல்லாம் பெருமைப் படுகின்றோம் இறுதியில் எல்லாமே பூச்சியம்தான் - இந்த ஆழமான சிந்தனைகளே விட்டுக்கொடுப்புக்கு வழிகோலும் ஏதோ நன்மைக்காக, அல்லது ஏதோ ஓர் தீர்வுக்காக நாம் எமது நிலையில் இருந்து இறங்கி வருவது எந்த விதத்திலும் குறைவாகாது மண்ணுலகில் மாமனிதர்களாக வாழ்ந்த அத்தனை பேரும் தியாகத்தில் தீபமேற்றியவர்களே விட்டுக்கொடுப்பு என்பதும் ஓர்துருவத்தில் தியாகம்தான்

இந்த வாழ்வியலில் வெற்றி என்பது எது தெரியுமா?... நாலு மனிதர்களை சந்தோசப்படுத்தி நாமும் சந்தோசமாக வாழ்வதுதான்


முரண்பாடுகள் தான் முடிவென்றால் வன்முறைதான் வாழ்க்கையென்றால் வழிமாறிப்பிறந்து விழிதேடும் ஒளிகள்தான் நாம். இதைத் தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோரைப் பிரிந்து, இழந்து எத்தனை பிஞ்சுகள் அநாதை இல்லங்களில் ஆறாத் துயரில் இருக்கின்றன. அன்புறவுத் தேவை, கணிப்புத்தேவை, பாதுகாப்புத தேவை என்பன எதுவுமே நிறைவு செய்யப்படாத நிலையில் உள்ள அந்தப்பிஞ்சுகளை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் இதைவிட உங்கள் முரண்பாடு முக்கியமானதா?... இதைவிட உங்கள் இறுமாப்பு இறுக்கமானதா?... அதை வைத்து எதைச் சாதிக்கப் போகின்றீர்கள் என்பதுதான் புரியவில்லை மாற்றம் வேண்டும் இதுமக்கள் முரசின் மறுதுருவப்பார்வை.




**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

சென்றவார விடைகள் அடுத்தவாரம் வெளியாகும்

அருகிலுள்ள வரிப்படத்தில் நான்கு எண்களைக் கொண்ட மூன்று தொகுதிகள் உள்ளன. ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள இலக்கங்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன. இத் தொடர்பை இனங்கண்டு A,B என்னும் குறியீடுகளால் குறிக்கப்படும் எண்களை எழுதுக?




A------------------

B ------------------

◆ பின்வரும் வினாக்கள் பின்வரும் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டவை. சீட்டுக்களின் தொகுதியொன்றிலிருந்து ஆறு சீட்டுக்கள் ஒவ்வொன்றும் இரு சீட்டுக்களைக் கொண்ட மூன்று தனித்தனியான அடுக்குகளாக அவற்றின் முகம் கீழ்நோக்கி இருக்கத்தக்கதாக மேசை மீது வைக்கப்பட்டுள்ளன. ஓர் அடுக்கில் 2 இருதயக்குறிச்சீட்டுக்களும் இன்னுமோர் அடுக்கில் 2 சாய்சதுரக் குறிச்சீட்டுகளும், மூன்றாவது அடுக்கில் 1 இருதயக் குறிச்சீட்டும் 1 சாய்சதுரக் குறிச்சீட்டும் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு முறையையும் கையாண்டு ஒவ்வொரு அடுக்கிலுமுள்ள சீட்டுக்களின் வகையைத் தீர்மானிக்க முடியுமாயின் (சரி) எனவும் தீர்மானிக்க முடியாதெனின் (பிழை) எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. ஓர் அடுக்கிலுள்ள ஒரு சீட்டினை இனங்கண்டு இவ்வடுக்கிலுள்ள மறு சீட்டினை இனங்காணாதிருப்பதன் மூலம அடுக்குகளிலும் எவ்வகையான சீட்டுகள் உள்ளன என்பதை ஒருவர் தீர்மானிக்க முடியும். (----------)

2. இரு அடுக்கிலுள்ள ஒவ்வொரு சீட்டையும் எஞ்சியுள்ள இரு சீட்டுக்களையும் இனங்காண்பதன் மூலம் மூன்று அடுக்குகளிலும் எவ்வகையான சீட்டுக்கள் உள்ளன என்பதை ஒருவர் தீர்மானிக்க முடியும். (----------)

**அனுப்பவேண்டிய முகவரி**
புதிர்ப்போட்டி
இல: ----------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ----------------------------------------
பாடசாலை :- ----------------------------------------
கல்வி கற்கும் தரம் :- ----------------------------------------
வீட்டு முகவரி :- ----------------------------------------
தொ.பேசி இலக்கம் :- ----------------------------------------

**சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்**

பெயர் :- சி. சபிதா
தரம் :- 12
பாடசாலை:- யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

பெயர் :- கி.நீரஜன்
தரம் :- 7
பாடசாலை:- யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி.

பெயர் :- க.துளசிகா
தரம் :- 7
பாடசாலை:- கிளி. பாரதி மகா. வித்தியாலயம்.

பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யாழ். வல்லை மகளிர் மகா வித்தியாலயம்.

# உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உணவுப் பழக்கவழக்கம் முக்கியமானது

## பொது வைத்தியநிபுணர் சிறிதரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

இன்றைய காலத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை தமது உடலில் கவனம் செலுத்துவது கட்டாய மானதாகும். அந்தவகையில் உடல் ஆரோக்கியத் திற்கு உணவுப்பழக்கவழக்கங்களை சரியான முறையில் கடைப்பிடிக்கவேண்டும் என பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிறிகரன் தெரிவித்தார்.

டாக்டர்.சபாபதி சபாரட்ணம் ஞாபகார்த்தமாக பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடாத்திய இலவச மருத்துவ முகாம் அண்மையில் காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நவீன சமையல் உபகரணங்கள் உடலுக்கு தீங்கு விளைவிப்பனவாகும். வீடுகளில் கரண்டிகளுக்குப் பதிலாக அகப்பைகளைப் பாவியுங்கள். ஏன் கூறுகின்றேன் என்றால் இன்று பெரும்பாலான வீடுகளில் சோற்றினை அகப்பைகளினாலும் கறிகளை கரண்டிகளினாலுமே எடுக்கிறார்கள். அதனால் அதிகளவு சோறும் குறைந்தளவு கறிகளுமே மதிய உணவாகின்றது. அது தவறு குறைந்தளவு சோற்றுடன் அதிகளவு கறிகளைச் சேருங்கள்

முட்டை அதிகளவு உண்ணக்கூடாது என்கின்ற மூடநம்பிக்கை காணப்படுகின்றது. அதனால் முட்டையை விற்று உருளைக்கிழங்கு வாங்கிச் சமைத்து பிள்ளைகளுக்கு கொடுக்கிறார்கள் அது தவறு ஒரு கோழிக்குஞ்சு வளர்வதற்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் முட்டையில் அடங்கி உள்ளது. எனவே வளரும் பிள்ளைகளுக்குத் தினமும் முட்டை கொடுங்கள் அதனை வீடுகளில் இலகுவாகப் பெறலாம்.

ஒவ்வொருவரும் ஆலய வழிபாடுகளை மேற்கொண்டு நல்ல உணவுப் பழக்கவழக்கத்தைக கடைப்பிடித்தால் நீண்ட தேகாரோக்கியத்துடன் வாழமுடியும் என்றார்

இந்த மருத்துவ முகாமில் இரத்தப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை, பொதுப் பரிசோதனை, கொலஸ்ரோல், ஈ.சீ.ஜி பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (10)

# திட்டமிடல் அலுவலர்களுக்கு விசேட பயிற்சி நெறி பூர்த்தி

வடமாகாண அரசாங்க திணைக்களங்களில் திட்டமிடல் அலுவலர்களாக கடமையாற்றிய 40 பேருக்கு திட்டமிடல் பயிற்சியின் பின்னர் கடந்த புதன்கிழமை சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனைய அரச திணைக்களங்களில் கடமையாற்றும் திட்டமிடல் அலுவலர்களான அபிவிருத்தி உத்தியோகத்தர்க்ள், உள்ளூராட்சி உதவியாளர்கள் என 40 பேருக்கு இரு கட்டங்களாக 5 நாள் பயிற்சியை வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்கள வடமாகாண பணிப்பாளர் பொ. வாகீசன் ஆகியோரின் திட்டத்தின் நேற்று முன் தினம் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதன் வளவாளர்களாக வடமாகாண பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்)ஆர். உமாகாந்தன், வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜெ.ஜெ.சி. பெலிசியன், வடமாகாண நன்நடத்தை ஆணையாளர் ரி. விஸ்வரூபன், வடமாகாண மோட்டார். போக்குவரத்து ஆணையாளர் வெ. ஜோன்சன், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எம்.துஷ்யந்தன் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் என். சர்வேஸ்வரன், பணிப்பாளர் எஸ். யோகராஜன் ஆகியோர் விசேட விரிவு ரைகளை வழங்கினர்.


மேற்படி 5 நாள் பயிற்சியின் பின்னர் கடந்த புதன்கிழமை 40 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

திட்டமிடலாளர்களுக்கு 18 துறைகளில் பயிற்சி வழங்கப்பட்டதாக முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்கள அலுவலர் தெரிவித்தார். (92)

# கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளலாம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் 1000 ரூபா பெறுபவர்களினதும் இம் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தை நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (104)



கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் ஜெயரட்ணத்தால் வசதி குறைந்த 76 ஆண் மாணவர்களுக்கும் 46 பெண்பிள்ளைகளுக்கும் காலணிகள் (சப்பாத்துகள்) அண்மையில் வழங்கப்பட்டது. கல்லூரி அதிபர் மாணவன் ஒருவருக்கு காலணிகள் வழங்குவதைக் காணலாம். (63)

# கும்பாபிஷேகம்

நல்லூர் சீரடிசாயிபாபா நூதன உற்சவ மூர்த்தியின் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது பக்தர்கள் காலை 8.30 மணிமுதல் முற்பகல் 10.00 மணி வரை பால்காப்புச்சாத்துவார்கள்.

கொக்குவில் கிருஸ்ணர் ஆலய தர்மகர்த்தா சிவாச்சாரிய திலகம் பிரம்மஸ்ரீ உ.கிருஸ்ணராசக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

காலை 7.00 மணிக்கு கர்ம ஆரம்பம் விநாயகர் வழிபாடு. அறுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம் வாஸ்து சாந்தி, தீப பூசை, தான்யவாசம், ஜலாதிவாசம், சயனரோவறுணம், கடஸ்தாபனம், கும்ப பூசை, தீபாராதனை வேதஸ்தோத்திரபாராயணம், மகாமங்களவாத்தியங்கள் முழங்க மஹா கும்பகள் வீதி உலாவைத் தொடர்ந்து மஹாகும்பாபிஷேகம், தசதர் சனம். விசேட பூசை விபூதிப் பிரசாதம் வழங்கல் இடம் பெறும் 4.00 மணிக்கு சாயரட்சப் பூசை, 430. மணிக்கு வசந்தமண்டபப் பூசை, திருவூஞ்சல் பாலா வீதி உலா 24 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். (01)

# வாரம் ஒரு காரம்

## இனப்பிரச்சனைக்கோர் தீர்வு இன்றைய சூழலில் வருமா?....

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்குழுத் தலைவரான கோபிஅனான் இலங்கைக்கு வர உள்ளார். சர்வதேச விசாரணை இடம்பெறவுள்ளது. மறுபுறத்தில் புதிய இந்தியப் பிரதமர் மோடி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தீர்வை ஏற்படுத்துமாறு, இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளாராம்.

வேறொரு புறத்தில் இம்மாத இறுதிக்குள் தென்னாபிரிக்க விசேட தூதுவர் சிறில்ரமபோஷா இலங்கைக்கு வர உள்ளாராம், இவர் கூட்டமைப்பு - அரசு பேச்சுக் குறித்து ஆராய்வாராம், இதற்கெல்லாவற்றிற்கும் அப்பால் பொலிஸ் அதிகாரத்தை மாத்திரம் விடுத்து மற்றைய அதிகாரங்களை மாகாண சபைகளிற்கும் கொடுப்பதென அரசு இறங்கிவந்துள்ளதாம்,

இவற்றையெல்லாம் நோக்கும்போது தமிழ்மக்களிற்கான தீர்வு வருமோ எனப் பத்திரிகைக் கண்ணோட்டத்தால் பரந்துபட்ட சந்தேகங்கள் உருவாகின்றது.

அவ்வாறான ஓர் அரசியல் தீர்வு வந்தால் அனைவரிற்கும் சந்தோசம்தான். ஆனால் இதற்கிடையில் பல சந்தேகங்கள் இருக்கின்றதே இதனை அந்தப் பத்திரிகைகள் மறைத்தாலும் மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமல்லவா?....

முதலாவதாக இந்த நேரத்தில் சர்வதேச விசாரணை என்கின்ற பெயரில் கோபிஅனான் வருவது குட்டையைக்குழப்பி தூண்டில் மீனைத் துரத்துவதைப் போலாகும். கூட்டமைப்பின் அலட்டல் பிரசாரத்தால் இவ்வாறான விசாரணைகள் எல்லாம் தமிழ்மக்களிற்கு சாதகமென நம்பியிருக்கின்றோம்.

அது தவறு. தமிழ்மக்களிற்கு அரசு தரமுனையும் அரசியல் தீர்வுகளையும் குழப்புகின்ற செயற்பாடே இது. இதற்கும் அரசியல் தீர்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சர்வதேச விசாரணை இடம் பெறும் போது தீர்வினை விரும்பாத, திட்டமிடல்கள் இல்லாத கூட்டமைப்புப் பிரதிநிதிகள் பலதையும் பத்தையும் பேசப் போகின்றார்கள். இதனால் மீண்டும் இனமுரண்பாடு அரசியல் விரோதத்தின் பெயரில் கொழுந்துவிட்டு எரியப் போகின்றது. இது தீர்வினைத் திசை மாற்றுமே தவிர தீர்வினைத் தேடித்தராது.

மோடிக்கும் இலங்கையரசுக்கும் இடையில் இலங்கைத்தமிழர் பிரச்சினைக்கப்பால் வேறோர் அரசியல் சிந்தனை மாற்றம் ஏற்படப் போகின்றது. அதாவது பொருளாதார ரீதியாகவும், உற்பத்தி ரீதியாகவும் மிக வேகமாக வளர்ந்துவரும் போட்டி நாடுகள் இரண்டினை இலங்கை தனது கைக்குழிக்குள் வைத்துள்ளது. சீனா - இந்தியா போன்ற நாடுகளே அவையாகும்.

இதனால் இலங்கை எதிர்காலத்தில் பாரிய சவால்களை எதிர் கொள்ளப்போவது ஒருபுறமிருக்க, இலங்கைத் தமிழர் பிரச்சினையை திசைமாற்றுவதற்கான ஓர் நடவடிக்கையாகவும் இது அமையலாம். தற்போது கோபிஅனான் வரும் சர்வதேச அரசியல் பின்னணியும் அதுவே, ஆனால் நாமே ஏதேதோ எமக்கு சாதகமாக்கிக் கற்பனை செய்கின்றோம்.

அமெரிக்க இலங்கை எதிர்ப்புக்கு அடிப்படையாக விளங்கும் இந்தியா - சீனா - இலங்கைத் தொடர்புகள் உலகளாவிய ரீதியில் பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது. இந்நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கையின் உறவுகளும், சர்வதேச தொடர்புகளும் அமெரிக்காவிற்குப் பெரிதல்ல. ஆனால் ஆசியக்கடற்பரப்பில் ஓர் வர்த்தக மையமாகவும், இயற்கைத் துறைமுகங்களைக் கொண்டதாகவும் இலங்கை உள்ளமையால் இந்நாடுகளின் ஒன்றிணைவை மட்டுப்படுத்தவும் தனது வல்லாதிக்கத்தை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா இலங்கை மீது நீட்டும் ஆயுதமே போர்க்குற்றம் எனும் பெயரிலான சர்வதேச விசாரணையாகும்.

இந்த அடிப்படையில் உருவாகும் விசாரணையையே எமது ஊடகங்கள் தமிழர்க்கு சாதகமாக சர்வதேச அரசியல் நகர்வதாகப் பிரசாரம் செய்கின்றனர்.

மறுதுருவத்தில் கூட்டமைப்பிற்கு உண்மை தெளிவாகத் தெரிந்தும் கூட தமது சர்வதேச பிரசார வெற்றியை இதனூடாக மக்களிற்கு படம்பிடித்துக் காட்டமுனைகின்றனர். ஏதோ காரணங்களால் வெவ்வேறு நாடுகள் இலங்கைக்குள் கால்பதிக்க அதை எமக்கு சாதகமாக்கி விமர்சிப்பதிலேயே காலம் போகின்றது.

தீர்க்கமானதும் திருத்தமானதுமான எந்த முடிவுகளும் நாம் எடுக்க தயாராக இல்லை. ஏனெனில், பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் தந்திரோபாயத்தையே கொண்டிருக்கும் தமிழ்த்தேசியத்தின் பார்வைக்கு அவை விரோதமானவையல்ல.

# கல்வி நிர்வாக சேவைக்கு 588 பேருக்கு நியமனம்




இலங்கை கல்வி- நிர்வாக சேவைக்கு 588 பேரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளிலும், கடந்த ஆறு வருடங்களாக வலயக் கல்வி அலுவலகங்களில நிலவுகின்ற பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

புதிதாக இணைத்துக் கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் உதவி அதிபர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொலைக்கு உடந்தை பெண் விளக்கமறியலில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு மீள்குடியேற்ற கிராமத்தில் இடம்பெற்ற கொலைக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பெண்ணொருவரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் மா.கணேஷராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

மேற்படி கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்ததுடன், இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இளைஞர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவருக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த இளைஞரின் தாய் நேற்று முன்தினம் முள்ளியவளை



பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கொலை செய்யப்பட்டவர் மதுபோதையில் தனது வீட்டிலிருந்து கொண்டு மனைவி, பிள்ளைகளுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தார். இந்தச் சண்டையை பார்க்க வந்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்ணுடன் மதுபோதையிலிருந்தவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், அவரைத் தாக்கினார்.

இதனையடுத்து தன்னை தாக்கியமை பற்றி குறித்த பெண் தனது மகனிடம் கூறியுள்ளார்.

இதைக் கேட்ட மகன் தனது தாயை அடித்துக் காயப்படுத்திய அந்த நபரின் வீட்டுக்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், அவரைக் கத்தியால் குத்திய நிலையில் அவர் மரணமடைந்தார்.

இதனைத் தடுக்க வந்த 22 வயது இளைஞர் ஒருவரையும் அவர் கத்தியால் குத்திக் காயப்படுத்தியுள்ளார். இதனையடுத்து குறித்த சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு உதவி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரின் தாய் கைதுசெய்யப்பட்டார்.

# புனரமைப்பிற்கு நிதியுதவி

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிப்படைந்த ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களை மீளவும் புனரமைப்புச செய்வதற்கு நிதி வழங்குதல் தொடர்பிலான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் ஈ.ஏ.சமரசிங்க கலந்துகொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த 11- இந்து ஆலயங்களையும் 5 கிறிஸ்தவ ஆலயங்களையும் புனரமைப்பதற்கு தலா ஒரு இலட்சம் ரூபா நிதி புனர்வாழ்வு அதிகார சபையினால் நன்கொடையாக வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேற்குறித்த ஆலயங்களில் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

# பரீட்சை நடவடிக்கைகளை அரசியல் மயமாக்க அனுமதி இல்லை

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள் தயாரிக்கும் நடவடிக்கையில் தான் தலையீடு செய்ததாக நிரூபித்தால் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக மன்னிப்புக்கோரத் தயாராகவிருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பரீட்சை நடவடிக்கைகள் அரசியல் மயமாவதற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லையெனக் குறிப்பிட்ட அவர், தனிப்பட்ட தேவைகளுக்காக அப்பாவி மாணவர்களைப் பலியிட வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

பரீட்சைகளை நியாயமாக மாணவர்களுக்கு அநீதியின்றி நடத்த ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்ற சட்டத்தின் ஊடாக பரீட்சைகள் ஆணையாளருக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் அவர் வினாத்தாள் திருத்தும் குழுவிலிருந்து பொருத்தமற்றவர்களை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து எமக்கு கேள்வியெழுப்ப முடியாது. யார் கல்வி அமைச்சராக இருந்தாலும் வினாத்தாள் தயாரிக்கும் பணிகளில் எதுவித தலையீடும் செய்வதில்லை. ஐ.தே.க தலைவர் ரணில் விக்ரமசிங்க கல்வி அமைச்சராக இருந்தபோதும் இதே நிலைப்பாடே காணப்பட்டது.

பரீட்சைகள் ஆணையாளருக்கு சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரமே வினாத்தாள் தயாரிக்கும் குழுவிலிருந்த இருவரை நீக்கியுள்ளார். இந்தக் குழுவிலிருந்த ஜகத் பண்டாரநாயக்க என்பவர் 10 வருடங்களுக்கு மேலாக சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றியவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குடிநீர் திட்டத்தை மேற்கொள்ள கிளிநொச்சியில் நீர்த்தாங்கிகள்

## 1620 மில்லியன் ரூபாவில் செயற்றிட்டம்



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் குடிநீர் விநியோகத் திட்டத்தினை மேற்கொள்ளும் வகையில் 1620 மில்லியன் ரூபா செலவில் இரண்டு நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜப்பானிய அரசின் நன்கொடை நிதியுதவியில் 880 மில்லியன் ரூபாவிலும் இலங்கை அரசின் நிதியுதவி 740 ரூபாவின் மூலமும் இந்தத் தண்ணீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

கண்டாவளைப் பிரதேசத்திற்கான தண்ணீர்த்தாங்கி பரந்தனிலும் கரைச்சி பிரதேசத்திற்கான தண்ணீர்த் தாங்கி டிப்போ சந்திப் பகுதியிலும் அமைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மேற்படி நீர்த்தாங்கிகள் அமைக்கும் பணி பெருமளவு முடிவுற்றுள்ளதாகவும் மிகுதி வேலைகளும் விரைவில் முடிவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகமானது யுத்த காலத்தில் சேதமடைந்ததுடன், அவற்றுக்கான நீர்த்தாங்கிகளும் சேதமாக்கப்பட்டன.

இதன்பின்னரே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, குடிநீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கான வேலைத் திட்டப் பணிகள் நிறைவுபெறும் வரையில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தற்காலிகமாக பொன்னகர், பாரதிபுரம், ஆனந்தபுரம், கிருஸ்ணபுரம், மலையாளபுரம் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊழலை இல்லாதொழிக்க வவுனியாவில் கருத்தரங்கு




(வவுனியா)

ஊழலை இல்லாது ஒழிப்பது தொடர்பான கருத்தரங்கு வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ட்ரான்ஸ்பேரன்சி இன்டநெஷனல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கருத்தரங்கின்போது இலங்கையில் இடம்பெறும் ஊழல்கள், இவை இடம்பெறும் பிரதேசங்கள், அவற்றை இல்லாதொழிப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு ஊழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள் உட்பட துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலாளர் வி.ஆயகுலன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் ட்ரான்ஸ்பேரன்றி இன்டநெஷினல் நிறுவனத்தின் வடமாகாண இணைப்பாளர் ரவீந்திர டி சில்வாவும் கலந்துகொண்டார்.

# இரணைமடு வாய்க்கால் வேலைகள் முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு வாய்க்கால்களின் கீழான 300 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகள் "இபாட்" திட்டத்தின் மூலம் கடந்தாண்டு (2013) முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி இரணைமடுக் குள வாய்க்காலின் கீழான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடந்த ஆண்டு முதல் இபாட் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு பிரதான வாய்க்கால்கள், கழிவு வ்ாய்க்கால்கள் ஆகியவற்றின் உருத்திரபுரம் வரையான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டு ஏ - 35 வீதியின் கீழுள்ள ஊரியான், முரசு மோட்டை ஆகிய பகுதிகளிலும் பூநகரி வீதியின் கீழுள்ள பகுதிகளான பெரியபரந்தன், பரந்தன் ஆகிய பகுதிகளிலும் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## பௌதீகவியல்


01) பின்வருவனவற்றுள் நேரத்தின் பரிமாணத்தை கொண்டிராத கணியம்,

1) வேகம் 2) பரப்பிழுவை
3) அமுக்கம் 4) வேலை
5) சடத்துவத் திருப்பம்

02) பிரதான அளவிடையின் 1 mm பிரிவுகள் 49 ஆனது 50 வேணியர் பிரிவுகளாக வகுக்கப்பட்ட வேணியர் அளவிடை கருவியொன்றில் அளக்கப்பட்ட நீளம் 6.048 cm ஆயின் அளவிடைக்கேற்ப பொருந்தும் வேணியர் பிரிவுகளின் எண்ணிக்கை

1) 48 2) 25 3) 24
4) 2 5) 1

03) தரப்பட்டுள்ள வரிப்படம், கிடையான மேசையொன்றின் மேல் வைக்கப்பட்டு, விடுவிக்கப்படும் போது எப்போதும் நிமிர்த்தம் நிலைக்குத்து நிலைக்கு மீளும், பொம்மையொன்றின் குறுக்குவெட்டொன்றை காட்டுகின்றது. இப்பொம்மையின் ஈர்வை மையம், பெரும்பாலும் காணப் படக்கூடிய இடம்,




1) A 2) B
3) C 4) D
5) E


04) V என்னும் மாறாக்கதியுடன் கிடையான தளம் ஒன்றில் உருளும் m திணிவுடைய திண்மக்கோளம் ஒன்றின் மொத்த இயக்க சக்திக்கு சமனாக இருப்பது, (திங்மக்கோளத்தின் சடத்துவத் திருப்பம் $2/5\ mr^2$, இங்கு r கோளத்தின் ஆரையாகும்)

1) $\frac{1}{2}mv^2$ 2) $\frac{1}{5}mv^2$ 3) $\frac{2}{5}mv^2$ 4) $\frac{7}{5}mv^2$ 5) $\frac{7}{10}mv^2$

05) ஓர் இரச வெப்பமானியின் குமிழில் இருந்து $100^0C$ வரையான வெப்ப நிலைக்கு இடைப்பட்ட இரசநிரலின் நீளம் $20^0$ mm உம், குமிழில் இருந்து $20^0C$ வெப்பநிலை வரையான நீளம் 80 mm உம் ஆகும். $0^0C$ இல் இரச நிரலில் நீளம்

1) 33 mm 2) 40 mm 3) 50 mm
4) 100 mm 5) 104 mm

06) ஓர் வட்டத்தட்டின் மையத்தில் படத்தில் காட்டியவாறு துறை ஒன்று உள்ளது. வெப்பநிலை அதிகரிக்கும்போது துளையின் விட்டம்,



1) குறைவடையும்
2) அதிகரிக்கும்
3) மாற்றமில்லை
4) ஆரம்பத்தில் குறைவடைந்து பின்னர் அதிகரிக்கும்
5) பருமன் மாற்றமில்லை ஆனால் வடிவம் மாறும்.

07) பொருள் ஒன்றும், திரை ஒன்றும் ஒரு குறிப்பிட்ட இடைத்தூரத்தில் வைக்கப்பட்டு அவற்றுக்கிடையில் குவிவுவில்லை ஒன்று வைக்கப்படும்போது 2.5 உருப்பெருக்கமுள்ள விம்பம் திரையில் பெறப்பட்டது. வில்லையானது திரையை நோக்கி 30 cm நகர்த்தப்பட்டபோது மீண்டும் தெளிவான விம்பம் திரையில் பெறப்பட்டது. ஆயின் வில்லையின் குவிய நீளம்

1) 14.0 cm 2) 14.3 cm
3) 14.6 cm 4) 14.9 cm
5) 30.0 cm

08) நிலையான அலையொன்றின் இயல்புகளைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A . பின்னடும் இரு கணுக்களுக்கிடையிலான துணிக்கைகள் ஒரே அவத்தையில் இருக்கும்.
B. சக்தி ஊடுகடத்தப்படும்.
C. வில்லையின் குவியத்தூரம் சிறிதாக இருத்தல் வேண்டும்.

1) A 2) B 3) A,B
4) A,C 5) A,B,C

09) எளிய நுணுக்குக் காட்டியாக பாவிக்கப்படும் வில்லைக்கு மிக அண்மையில் கண் இருக்கும்போது உருப்பெருக்க வலு உயர்வாக இருப்பதற்கு,

A . பின்னடும் இரு கணுக்களுக்கிடையிலான துணிக்கைகள் ஒரே அவத்தையில் இருக்கும்.
B. பொருள் தலைமைக் குவியத்திற்கு சற்று உள்ளே இருக்க வேண்டும்.
C. வில்லையின் குவியத்தூரம் சிறிதாக இருத்தல் வேண்டும்.

இக்கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை.


1) A 2) B 3) A,B
4) A,C 5) A,B,C

10) கார் ஒன்று மாறா ஆர்முடுகலுடன் இயங்கும்போது பெறப்பட்ட திக்கர் நாடாவை அருகிலுள்ள உரு காட்டுகின்றது. அதிரியின் அதிர்வெண் 20 Hz தொடர்ந்து வரும் பொட்டுகளுக்கிடைப்பட்ட தூரங்கள் முறையே 1 cm, 2 cm, 3 cm எனின் காரின் ஆர்முடுகல்,




1) 2 ms-2 2) 4ms-2
3) 6 ms-2 4) 8 ms-2 5) 10 ms-2

11) 2 kg திணிவும் $1000kgm^{-3}$ அடர்த்தியும் உடைய ஒரு திண்மப்பொருள் இழையொன்றினால் தொங்கவிடப்பட்டுள்ளது. பொருளை படிப்படியாக நீரினுள் அமிழ்த்தும்போது நீரினுள் அமிழ்ந்திருக்கும் கனவளவு V உடன் இழையின் இழுவை T இன் மாறலை திறம்படக் காட்டுவது.




12) கிரிக்கெட் துடுப்பு ஒன்று அதனது புவியீர்ப்பு மையத்தினூடாக செல்லும் கோட்டினூடு படத்தில் காட்டியவாறு வெட்டப்படுகின்றது.




1) இரண்டு துண்டுகளும் ஒரே திணிவைக் கொண்டிருக்கும்.
2) கீழே உள்ள துண்டு அதிக திணிவைக் கொண்டிருக்கும்.
3) கைப்பிடியுடனான துண்டு அதிக திணிவை கொண்டது.
4) கைப்பிடியுடனான துண்டின் திணிவு கீழ்த் துண்டினது திணிவிலும் இரு மடங்காகும்.
5) கைப்பிடியின் நீளத்திற்கு ஏற்ப திணிவுகள் வேறுபடும்.

13) பொருள் ஒன்று எறியப்படும்போது அதன் அதியுயர் உயரமும், கிடை வீச்சும் சமனாயின் நிலைக்குத்து வேகக்கூறு $V_2$ இற்கும், கிடை வேகக் கூறு $V_1$ இற்கும் இடையிலான விகிதம்

$V_2/V_1$ ஆனது,

1) 1 2) 2 3) 4 4) $\sqrt{2}$ 5) 2

14)




ஒரே தடவையில் ஓர் 50 Hz சைகையையும் மீடிறன் f (f >50Hz) ஐ உடைய வேறொரு சைகையையும் உருவாக்குகின்ற ஒரு நுணுக்குப் பன்னியுடன் ஓர் அலைவுகாட்டி தொடுக்கப்பட்டுள்ளது. உரு A ஆனது 50 Hz சைகையுடன் மாத்திரம் உள்ள சுவட்டினையும், உரு B ஆனது சேர்ந்த சைகையின் விளைவாக உள்ள சுவட்டினையும் காட்டுகின்றன. f இன் பெறுமானம்

1) 50 Hz 2) 55Hz 3) 60 Hz
4) 65 Hz 5) 70 Hz

15) புவியின் புற அகணி திரவத்தினால் ஆனது என்று நடுக்கவியலாளர்கள் முடிவுக்கு வரக் காரணமாக அமைந்த அலை,

1) P அலைகள் 2) S அலைகள் 3) லவ் அலைகள்
4) றேலி அலைகள் 5) சுனாமி அலைகள்


16) பொருள் ஒன்று -32C என்னும் பெறுமானத்திற்கு மின்னேற்றப்படுகின்றது. இலத்திரனின் ஏற்றம் $-1.6 \times 10^{-19}$ C இற்குச் சமனெனின், அப்பொருளில் இருக்கும் மிகையான இலத்திரன்களின் எண்ணிக்கை,

1) 0 2) $10^{-19}$ 3) $2x10^{-19}$
4) $10^{20}$ 5) $2x10^{20}$

17) 12 m நீளமும் 6 kg திணிவுமுடைய ஓர் சீரான இழையானது நிலைத்த வளை ஒன்றிலிருந்து தொங்கவிடப்பட்டு அதன் கீழ் முனையிலே 2 kg திணிவு இணைக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் முனையிலிருந்து 0.05 m அலைநீளமுடைய ஓர் குறுந்துடிப்பானது மேல்நோக்கி செலுத்தப்படுகின்றது. துடிப்பான மேல் முனையை அடையும்போது அதன் அலைநீளம்

1) 0.025m 2) 0.05 m 3) 0.10m
4) 0.20 m 5) 0.25 m

18) 1 m ஆழமுள்ள நீர்த்தடாகத்தினுள் ஒரு கம்பம் நிலைக்குத்தாக வைக்கப்பட்டுள்ளது. நீர் மட்டத்திற்கு மேல் அதனுயரம் 1 m ஆகும். நீரின் முறிவுச்சுட்டி $\sqrt{2}$ ஆக உள்ளபோது சூரிய ஒளியானது கிடையுடன் 450 இல் விழும்





(1) 1m (2) $\left(1+\frac{1}{\sqrt{2}}\right)$m

(3) $\left(1+\frac{1}{\sqrt{3}}\right)$m (4) $\left(1+\sqrt{3}\right)$m

(5) $\left(1+2\sqrt{3}\right)$m


19) ஒவ்வொன்றும் f குவிய நீளமுடைய இரு குவிவு வில்லைகள் படத்தில் காட்டியவாறு ஓரச்சுடையதாக 20 cm வேறாக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. ஒரு வில்லையிலிருந்து 10 cm தூரத்தில் வைக்கப்பட்ட பொருள் O இற்கு தோன்றும் இறுதி விம்பம் I ஆனது மறு வில்லையிலிருந்து 10 cm தூரத்தில் உருவாக்கின்றது எனின் f இன் பருமன்,




1) 2.5 cm 2) 5.0 cm 3) 10.0 cm
4) 20.0 cm 5) 40.0 cm

20) கூட்டு நுணுக்குக்காட்டி ஒன்று 3 cm, 4 cm குவிய நீள குவிவு வில்லைகளைக் கொண்டுள்ளது. பொருளியிற்கு முன்னால் 4 cm இலுள்ள பொருள் ஒன்று கருவியினூடு அவதானிக்கப்படுகின்றது. இறுதி விம்பம் முடிவிலியில் உண்டாகுமாறு அது செப்பம் செய்யப்பட்டுள்ளது. வில்லைகளுக் கிடைப்பட்ட தூரம்.

1) 7 cm 2) 12 cm 3) 16 cm
4) 20 cm 5) 17 cm




21) இரு சர்வசமனான ஏற்றிய கோளங்கள் சமநீள முடைய இரு இழைகளினால் தொங்கவிடப்பட்டு உள்ளன. இழைகளுக்கிடையில் ஆக்கம் கோணம் 2 ஆகும். இப்போது இக்கோளங்கள் அடர்த்தி வை உடைய திரவம் ஒன்றினுள் அமிழ்த்தப்படும்போது அதே கோணங்களை மீண்டும் அமைகின்றன. கோளத்தின் அடர்த்தி d எனின், திரவத்தின் மின்னிழைய மாறிலிக்கான கோவையை தருவது,


1) $\frac{\sigma}{d}$ 2) $\frac{d-\sigma}{d-}$

3) $\frac{d}{d-\sigma}$ 4) $\frac{d}{\sigma}$ 5) $\frac{\sigma}{d}-1$

22) f குவியத்தூரமுடைய ஒருக்கு வில்லை ஒன்றின் உண்மை விம்பத்திற்கு பொருள்தூரம் u. விம்பத்தூரம் v ஆகும். u இற்கு எதிராக (V +u) வரைபை வரைந்தால் (V = U) இற்காக பெறப்படும் இழிவுப்பெறுமானம்,

1) f. 2) 2f 3) 4 f
4) $f^2$ 5) $f^2 + 2f$


23) பாத்திரமொன்றினுள் கொள்ளப்பட்டுள்ள திரவம் ஒன்றின் மீது பொருள் ஒன்று மிதக்கின்றது. காட்டப்பட்ட தொகுதியானது ஈர்ப்பின் கீழ் விழ விடப்படுகின்றது. திரவத்தினால் அப்பொருளுக்கு கொடுக்கப்படும் மேலுதைப்பு,



1) பூச்சியமாகும்
2) இடம்பெயர்ந்த திரவத்தின் நிறைக்குச் சமனாகும்.
3) வளியிலுள்ள பொருளின் நிறைக்கு சமனாகும்.
4) பொருளின் அமிழ்ந்துள்ள பகுதியின் நிறைக்கு சமனாகும்
5) பொருளின் அமிழாத பகுதியின் நிறைக்கு சமனாகும்.

24) உலோகப் பந்து ஒன்றின் வெப்பநிலை $30^0C$ இனால் அதிகரிக்கப்பட்ட போது, அதன் கனவளவு 0.18% இனால் அதிகரித்தது. பந்து ஆக்கப்பட்ட அவ் உலோகத்தின் ஏகபரிமாண விரிகைத்திறன்,

25) கிடைப்பரப்பொன்றின் மீது ஓய்விலுள்ள M திணிவுடைய குற்றியொன்று உருவில் 'காணப்படு கின்றது. அக்குற்றியுடன் பொருத்தப்பட்டு ஒப்பமான கப்பியின் மீதாகச் செல்லும் இலேசான வடம் ஒன்றினது மறு அந்தத்தில் இருந்து m திணிவுடைய சிறுவன் ஒருவன் ஏறுகின்றான். மேற்பரப்பிலிருந்து குற்றி தூக்குப்படுவத்ற்கு அச்சிறுவன் கொண்டிருக்க வேண்டிய இழிவு ஆர்முடுகல்




1) $\frac{M}{m}$ g 2) $\frac{M}{m}$ g

3) $\left(\frac{m}{M}+1\right)$ g 4) $\left(\frac{M}{m}+1\right)$ g

5) $\left(\frac{M}{m}-1\right)$ g

## பகுதி A

01) PQR உராய்வுள்ள சுழலிடம் Q இல் ஈர்ப்பு மையத்தினைக் கொண்ட 40 cm நீளமுடைய மெல்லிய மரத்தாலான வளையும். AB - மெல்லிய உலோகக் கம்பியும், S -mm அளவிடையும் ஆகும்.

மெல்லிய கம்பி வடிவில் அமைந்த உலோகத்தின் நீள விரிகைத்திறன் துணிவதற்கான நெம்புகோல் முறை ஒன்றின் அமைப்பு அருகில் காட்டப்பட்டுள்ளது. AB இன் நீளம் 50 cm ஆகும். இது B இல் விறைப்பாக பொருத்தப்பட்டுள்ளது. வன்மையான இறப்பர்க் குழாயினூடு நீராவியினைச் செலுத்தி கோல் விரியும் போது P இனை மேல் நோக்கி தள்ளும்போது அளவிடையில் ஏற்படும் மாறலைக் கொண்டு விரிவுகளைக் காணப்பட வேண்டியுள்ளது. ஆரம்பத்தில் PQR கிடையாக உள்ளது.

a. மரத்தாலான வளையின் புவியீர்ப்பு மையம் சுழலிடம் Q இல் இருப்பதால் நன்மை யாது? ----------------------------------------

b. கம்பியினை சூடாக்குவதற்கு நீராவி X இனூடாகவா Y இனூடாகவா செலுத்துவீர்? காரணம் தருக.

----------------------------------------

c. இப்பரிசோதனையின் நீளவிரிவு காண்பதற்கான படிமுறைகளை சுருக்கமாக தருக.

i. ----------------------------------------
ii. ----------------------------------------
iii. ----------------------------------------
iv. ----------------------------------------

**கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை வினாக்களின் விடைகள்**

### 01 மே 2014 ஞாயிற்றுக்கிழமை


| | | | |
|---|---|---|---|
| 12) | 11. 1 | 1. 114 பேர் | 14) பொருத்தமான வாக்கியங்கள் |
| 6. 1 | 12. 4 | 2. 260 பேர் | |
| 7. 4 | 13. 3 | 3. 22 | |
| 8. 2 | 14. 2 | 4. வீரசிங்கம் மகா வித்தியாலயம் | |
| 9. 2 | 15. 2 | 5. வீரசிங்கம் மகா வித்தியாலயம். | |
| 10. 4 | 13) | | |

### 03 மே 2014 செவ்வாய்க்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 2 | 31) 2 |
| 2) 1 | 12) 2 | 22) 2 | 32) 2 |
| 3) 2 | 13) 1 | 23) 3 | 33) 3 |
| 4) 2 | 14) 1 | 24) 1 | 34) 1 |
| 5) 3 | 15) 2 | 25) 3 | 35) 2 |
| 6) 1 | 16) 2 | 26) 2 | 36) 1 |
| 7) 3 | 17) 2 | 27) 3 | 37) 1 |
| 8) 2 | 18) 1 | 28) 1 | 38) 3 |
| 9) 2 | 19) 3 | 29) 1 | 39) 3 |
| 10)2 | 20) 2 | 30) 2 | 40) 1 |

### 06 மே 2014 வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| 1) 2 | 11) 3 | 21) 29 |
| 2) 2 | 12) 2 | 22) 5,125 |
| 3) 1 | 13) 3 | 23) 144 |
| 4) 3 | 14) 2 | |
| 5) 2 | 15) 1 | |
| 6) 1 | 16) 2 | |
| 7) 2 | 17) 3 | |
| 8) 2 | 18) 2 | |
| 9) 2 | 19) 2 | |
| 10)2 | 20) 45 | |





சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவத்தில் கொடியேற்றம் நிகழ்வதையும் ஆலய பிரதம குரு விநாயகருக்கு தீபாராதனை நிகழ்த்துவதையும் சுவாமி உள்வீதி உலா வருவதையும் காணலாம்.

( படங்கள்-இ.ராஜகுமார் )

# கவிதையை படைக்கும் கவிஞன் சொற்களை மூலதனமாக்க வேண்டும்

## பேராசிரியர் சிவலிங்கராஜா தெரிவிப்பு



(கொழும்பு)

கவிதை படைப்பது படைக்கின்ற கவிஞனது உள்ளம் சார்ந்ததும் தன்னுணர்ச்சி சார்ந்ததுமாகும். கவிதைக்கு மூலதனமாக அமைவது சொற்கள் சொற்களினை எவ்வாறு கவிஞன் அடுக்கிக்கொள்கின்றானோ அதற்கு ஏற்பவே கவிதை வரும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு நிலை தமிழ்த்துறை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண தமிழ்ச்சங்கமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையும் இணைந்து நடாத்திய கவிதைப்பட்டறை யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்தின் தலைவரும் வணிக பீடாதிபதியுமான பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தொரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கவிதையொன்றினை வரைவிலக்கணப்படுத்தமுடியாது. அது உணர்ச்சிசார்ந்தது. அது படைப்பாளியினது உணர்வு சா்ந்தது என்பதினை பொறுத்தது. கவிதைக்கு உணர்ச்சி பிரதானமாகும். அது பேசுகின்ற விடயத்தினை பொறுத்து உணர்ச்சி வேறுபடுகின்றது.

கவி உள்ளத்தில் இருந்து வருகின்றது கவிதையினை இரசிப்பது எமது முதல் பணியாக இருக்கவேண்டும். இரசிப்பதற்கு முதலில் மொழித்தேர்ச்சி இன்றியமையாததாகும். மொழியினை ரசிக்க பழகுதல் வேண்டும். அதனுடாக உள்ளத்தின் உணர்வுகளினை ஆற்றல்களினை வெளிக்கொணர வேண்டும்.எமது கவிதைக்கு நீண்டவரலாறு உண்டு நல்ல கவிதை என்பது மனதில் நிற்க வேண்டும். நல்ல கவிதைகளினை பாடமாக்குவதில்லை மாறாக அவை பாடமாகின்றன.

சொற்கள் நடந்தால் கட்டுரை நடனமாடினால் கவிதை எனச் சிலர் நகைச்சுவையாக கணிப்பிடுவதுண்டு இதற்குக் காரணம் சொற்களின் சேர்மானம் ஆகும். கவிஞர் தான் சொல்ல விரும்பியதினை ஏதோ வடிவில் சொல்ல நினைக்கின்றான். அவை ஒவ்வொரு வடிவங்களாக வெளிப்படுகின்றன. ஈழத்து கவிஞர்களினை பொறுத்தவரையில் மகாகவி சேரன் ஜெயபாலன் நீலவாணன் போன்ற பலர் சிறப்பாக கவிதை படைத்தமையினை காணலாம் என்றார். (63)

# சித்திரம், சுவரொட்டி போட்டி

(யாழ்ப்பாணம்)

சவிய அபிவிருத்திமன்றம் சர்வதேச பாலை வனத்தடுப்பு தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் சித்திரப் போட்டியை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகளில் கனிஷ்ட பிரிவாக வயது 11-15 இற்குட்பட்டவர்களும் சிரேஷ்ட பிரிவாக வயது 16-25 இற்குட்பட்டவர்களும் கலந்து கொள்ளலாம்.

இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம். இன்றைய தினம் சவிய அபிவிருத்தி மன்றம் 24/A வெல்லவல்வல வீதி காலி என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0912245781 091223428 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம் முதல்பரிசு 500 உம் இரண்டாம்பரிசு 3000 ரூபா மூன்றாம் பரிசு 2000 ரூபாவுடன் சான்றிதழ்களும் வழங்கப்படுவதா அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# கும்பாபிஷேக மலர் வெளியீடு



(சுன்னாகம்)

சுன்னாகம் செல்வபூமி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை கும்பாபிஷேக ஆண்டுப் பூர்த்தியின் போது புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக மலர் ஆலய முன்றலில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ இரத்தின வைத்தியநாதக் குருக்கள்,ஸ்தானிக குரு பிரம்ம ஸ்ரீ அ.குமாரராஜசர்மா ஆகியோரின் ஆசிச் செய்தியுடன் ஆலய வரலாறு ஸ்ரீ புவனேஸ்வரிமாலை, அம்மன் ஊஞ்சல் பாக்கள், ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகள் கலர் படங்கள், கருமாரி அம்மன் தோத்திரம், பாலஸ்தாபன விஞ்ஞாபன அளித்தல் கும்பாபிஷேக அறிவித்தல் எனப் பல்வேறு உள்ளடக்கத்துடன் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. (இ)

# கொடிகாமம் வணிகர் மன்றத்தால் மாணவர்களுக்கு உதவிகள்



கொடிகாமம் வணிகர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த வாரம் இடம்பெற்றது. அதில வறிய மாணவர்களுக்கான உதவித்திட்டத்தில் நாற்பது மாணவர்களுக்கான ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான காலணிகள் (சப்பாத்துகள்) வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கொடி.திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர், கொடிகாமம் மத்தி கிராமசேவையாளர், கொடிகாமம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல்

(வேலணை)

குறிகாட்டுவான் நயினாதீவு ஆகிய இரு இறங்குதுறைகளுக்கிடையில் சேவையாற்றி வருகின்ற மோட்டார் படகு உரிமையாளர்கள் பாதை சேவையில கடமையாற்றி வருகின்ற உத்தியோகத்தர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது. (05)

# மாணவர்களிடையே நடாத்தப்பட்ட இந்து சமய போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோறவத்தை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் விபரங்கள் வருமாறு,

**பேச்சு (மத்தியபிரிவு)** - ச.சஞ்சிதா, பா.சஞ்ஜயன், தெ.சாருஜா

**மேற்பிரிவு** - ஜீ.யதுளன், இ.திலக்சனா, பா.சினேகா

**கும்பம் வைத்தல் (மத்திய பிரிவு)** - வி.வைஷ்ணவன், பா.சஞ்ஜயன், இ.ஜானுஜா

**மேற்பிரிவு** - பா.சினேகா, பெ.நிரஞ்சனா, இ.திலக்சனா, பா.சானுயன்

**கவிதை மேற்பிரிவு** - இ.திலக்சனா, ஜீ.யதுளன், பா.ஜானுயன்

**கட்டுரை**

மத்தியபிரிவு - சி.மானுஜா, ச.சஞ்சிதா, தே.சாருஜா

**மேற்பிரிவு** - ஜீ.யதுளன், பா.சிநேகா, ப.இராஜசாளினி

**வினாடிவினா மேற்பிரிவு** - ஜீ.யதுளன், இ.திலக்சனா, ப.இராஜசாளினி

**தேவாரம் பாலர்பிரிவு** - ஜீ.திவ்யா, வ.வர்சனா, நி.அஷ்சகி *(முற்றும்)* (இ)

# வாழ்க வளமுடன்

**சிறாரின் பெயர்** :- ..............................

**முகவரி** :- ..............................

**பிறந்த ஆண்டு** :- ..............................

**கூப்பன் ஐந்தும், புகைப்படமும்**

..............................

**பெற்றோர் கையொப்பம்**

# ஆசிய கடல் எல்லை விவகாரம்
# சீனா மீது நடவடிக்கை அவசியம்

## ஜி 7 நாடுகள் வலியுறுத்து




(பிரஸ்ஸல்ஸ்)

ஆசிய கடல் பகுதியில் நிலவும் கடற் எல்லை விவகாரத்திற்கு, "ஜி 7 நாடுகளின் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். "கிழக்கு மற்றும் தெற்கு சீனக்கடற்பகுதியில் நிலவும் எல்லை விவகாரங்களை, சர்வ தேச சட்டங்களுக்குட்பட்டு, நாடுகள் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என, வளர்ந்த நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான, பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்சில், பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைந்த, ஏழு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும், ஜி 7 நாடுகள் அமைப்பின் வருடாந்த மாநாடு, நேற்றுமுன்தினம் ஆரம்பமானது அதில், ஆசியக்கடற் பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலை குறித்து, தலைவர்கள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக, தெற்கு சீனக் கடற பகுதியில் பல தீவுகளை தனனுடையது என சீனா தெரிவிக்கிறது. இதனால் அந்த தீவுகளுக்கு சொந்தம் கொண்டாடும், அண்டை நாடுகளான, ஜப்பான், மலேசியா புருனே, பிலிப்பைன்ஸ், வியட்நாம் தைவான் மற்றும் இந்தோனேசிய நாடுகளுடன், சீனா மோதல் போக்கை கொண்டுள்ளது.இதனால், அந்தப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இந்த விவகாரத்தை, வளர்ந்த நாடுகளின் தலைவர்கள், தங்கள் முதல் விவாதமாக எடுத்து விவாதித்தனர்.

பின், அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது: ஆசியாவின் கிழக்கு மற்றும் தெற்கு சீனக்கடல் பகுதியில் நிலவும் பதற்றமான சூழ்நிலை, எங்களுக்கு கவலை அளிக்கிறது. சர்ச்சைக்குரிய கடற பகுதி, தங்களுடையது தான் என, எந்த நாடும், தன் படைகளை பயன்படுத்தி, பிற நாடுகளை தாக்குவதோ, அச்சுறுத்துவதோ கூடாது. சர்வதேச கடல் சட்டங்களின் படியும், மத்தியஸ்த முயற்சிகளின் படியும், பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போகோ ஹாரம் தாக்குதல் 45 கிராம வாசிகள் பலி



நைஜீரியாவின் போகோ ஹராம் முஸ்லிம் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரே கிராமத்தைச் சேர்ந்த 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் வடகிழக்கு திசையில் உள்ள மாய்டுகுரி மாவட்டத்தில் உள்ள சிற்றூரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள மக்கள் வழமையான ஒன்று கூடலில் ஈடுபட்டிருந்த வேளையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை போகோ ஹராம் முஸ்லிம் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில், இந்த வாரத்தில் மாத்திரம் 200 இற்கும் அதிகமான கிராமவாசிகள் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலிபான்களால் விடுவிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வீரரால் சர்ச்சை

ஆப்கானிஸ்தான் - தாலிபான்களால் விடுவிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வீரரின் வருகைக்காக அமெரிக்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.


குறித்த இராணுவ அதிகாரி அமெரிக்க இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர் என்ற காரணத்தினாலேயே இந்த நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

5 வருடங்களாக தலிபான்களால் தடுத்து வைக்கப்பட்டி ருந்த அவர், கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் 2009ஆம் ஆண்டு எவ்வாறு தலிபான்களின் கைகளில் சிக்கினார் என்பது குறித்து இன்னும் தெளிவாக தெரியவில்லை என்றும் கூறப்படுகின்றது.

எனினும் அவர் ஆப்கானிஸ்தானின் பக்டிகா மாகாணத்தில் உள்ள அமெரிக்க இராணுவ முகாமில் பணியாற்றி இருந்த வேளையில், 2009ஆம் ஆண்டு அங்கிருந்து தப்பிச்சென்றதாகவும் அதன் பின்னரே அவர் தலிபான்களால் கடத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் சந்தேகிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அவரை தண்டனைக்குட்படுத்துமாறு பல்வேறு தரப்பில் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கத்தோலிக்க திருச்சபையின் தமிழ் கர்தினால் காலமானார்



வத்திக்கானில் உள்ள கத்தோலிக்க திருச்சபையில் கர்தினால பதவி வகித்த ஒரேஒரு தமிழ் பாதிரியாரான துரைசாமி சைமன் லூர்துசாமி காலமானார்.

நோய்வாய்ப்பட்டிருந்த இவர் கடந்த 2ஆம் திகதி காலமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1934ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி தமிழ் நாட்டின் செஞ்சியில் உள்ள கல்லேரிப்பகுதியில் பிறந்த அவர், 1985ஆம்ஆண்டு கர்தினால் பட்டம் பெற்று றோமில் பதவி வகிக்க ஆரம்பித்தார்.

இவருக்கு பாப்பரசர் பிரான்ஸிஸ் இன்று ஆராதனை செய்ததன் பின்னர், நாளை அவரது உடல் பாதுவைக்கு எடுத்துவரப்பட்டு, அஞ்சலிக்கு செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவிரவாதிகள் தாக்குதல் 14ஜேமன் வீரர்கள் பலி

ஜேமனில் தெற்குப் பகுதியிலுள்ள ஒரு இராணுவ சோதனைச் சாவடி மீது துப்பாக்கி ஏந்திய அல்கொய்தா தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தாக்குதல் நடாத்தியதில் 14 இராணுவ வீரர்கள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர்.

ஜேமனில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் கிளர்ச்சியாளர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல் நிலவி வரும் நிலையில், 'ப்வா மாகாணத்தில் உள்ள பேஹன் கிராமம் அருகே உள்ள ஒரு சோதனைச் சாவடி மீது தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

தானியங்கி துப்பாக்கியைக் கொண்டு நடைபெற்ற இந்தத் தாக்குதலில் 14 இராணுவ வீரர்கள் மற்றும் ஒருவர் உட்பட மொத்தம் 15 பேர் கொல்லப்பட்டதாகவும் பல வீரர்கள் காயமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் சனாவுக்கு கிழக்கே வதி அபிதாப் பகுதியில், ஆளில்லா விமானம் மூலம கடந்த புதன்கிழமை நடாத்தப்பட்ட தாக்குதலில் அல்கொய்தா தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 3 பேர் கொல்லப்பட்ட நிலையில் இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

ஏமன் பகுதியில் ஆளில்லா விமானங்களை அமெரிக்கா மட்டுமே இயக்கி வருகிறது. ஆனால், இதுபோன்ற தாக்குதல்களை அமெரிக்க அதிகாரிகள் வெளிப்படையாக ஒப்புக் கொளவதில்லை.

உலகச் செய்திகள்

# மனோரமா கவலைக்கிடம்



நடிகை மனோரமாவின் உடல் நிலை தொடர்ந்து மோசமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான படங்களில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர வேடத்தில் நடித்துள்ள நடிகை மனோரமாவிற்கு கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு மூச்சுத் திணறல் ஏற்பட்டது இதனையடுத்து உடனடியாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சை அளித்து வரும் இந்நிலையில், மனோரமாவின் உடல்நிலை தொடர்ந்து மோசமான நிலையிலேயே இருப்பதாகவும், அடுத்த 28 மணி நேரத்துக்கு அவர தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே வைக்கப்பட்டு இருப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# செயற்கை இதயத்துடன் உயிர் வாழும் 13 நாள் குழந்தை





பிரித்தானியாவில் பிறந்து 13 நாட்களே ஆன குழந்தை, செயற்கை இதயம் பொருத்தப்பட்டு சுவாசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டியார்னா மிட்டில்டன் என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இக் குழந்தை உலகின் செயற்கை முறையில் சுவாசிக்கும் இளைய குழந்தையாகும்.

5 பவுண்ட் எடையுடன் பிறந்த இந்தக் குழந்தைக்கு வைடன் கோரொனரி ஆர்ட்டரிஸ் மற்றும் வலது பக்க இதயம் இல்லாததால் செயற்கை இருதயம் பொருத்தப்பட்டுள்ளது.

தற்போது உயிருக்குப் போராடி வரும் இந்தக் குழந்தைக்கு விரைவில் இதய மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டும்.

குழந்தையின் பெற்றோர்களான சார்னெ க்ரே (வயது 22), காரி மிட்டில்டன் (வயது 25), ஆகியோர் மக்களை உறுப்புத் தானம் செய்யுமாறு கேட்டுள்ளனர். இதுவரை எந்தவித இதயமும் கிடைக்காததால் 33 பவுண்ட் எடையுள்ள இயந்திரத்தின் உதவியுடன் சுவாசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.



பிரான்ஸ் சென்றிருந்த பிரிட்டன் ராணி எலிசபெத், ரயில் பயணம் மேற்கொள்ள பாரிசில் உள்ள ஒரு ரயில் நிலையம் சென்றபோது...

# சர்வதேசத்தின் நகர்வுகள் எமக்கு விமோசனம் தராது



(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் ஆயுதமேந்திய போராட்டம் இனி எந்தக்காலத்திலும் சாத்தியமற்ற ஒன்றாகி விட்டது. வெளிநாடுகளின் எந்த அரசியல் நகர்வுகளும் எமக்கு எந்தவித தீர்வையும் பெற்றுத் தரப்போவதில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

கொடிகாமம் தவசிக்குளம் பகுதி வறிய மக்களின் அபிவிருத்தி தொடர்பாக அப்பகுதி முக்கியஸ்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சந்திப்பொன்று அப்பகுதி காணிக்கை மாதா கோவிலின் முன்றலில் நடைபெற்றது. அங்கு கலந்து கொண்டு கருத்துரைத்த ஒருங்கிணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரச்சினைக்கு மூல காரணமாக இருந்ததும் இந்தியா தான். எமக்கான அரசியல் தீர்வைப் பெற்றுத்தரும் சக்தியும் இந்தியாவுக்கே உண்டு. தமிழ் இனவாதம் பேசும் அரசியலை நம்பி வாக்களிப்பதனால் இன்று வரை நீங்கள் கண்டது அழிவுகளை மட்டும்தான். குடும்ப நலனுக்காக ஒருபோதும் அரசியலை நாம் நடத்தியவர்கள் கிடையாது. எமது சக்திக்கு அப்பாற்பட்ட வகையிலும்கூட நாம் உங்களுக்கான அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மக்கள் சக்தியாக விளங்கும் நீங்கள் வருங்காலத்தில் எமக்கு அரசியல் ரீதியான பலத்தைத் தாருங்கள். நாம் உங்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வொன்றை பெற்றுத்தருகின்றோம். எமக்கான ஒரு தீர்வுத்திட்டம் நிச்சயம் வரத்தான் போகிறது. அதுவரை நாம் காத்திருக்கமுடியாது.

ஒட்டுமொத்த தமிழருக்குமான நிரந்தர அரசியல் தீர்வொன்றை நாம் பெற வேண்டுமானால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உங்கள் அரசியல் பலத்தை கொடுக்கவேண்டும். நாங்கள் தேர்தல் காலத்தில் மட்டும் உங்களிடம் வருபவர்கள் அல்லர். நாங்கள் உங்களுக்கு செய்யும் சேவைகளுக்கு நீங்கள் சிந்தித்து அரசியல் பலத்தை தர வேண்டும். இதன் மூலம் நாம் இன்னும் அதிகளவான சேவைகளைச் செய்யமுடியும் என்றார்.

மக்களது தேவைகளை நேரில் கேட்டறிந்த ஒருங்கிணைப்பாளர் இப்பகுதிக்கு மிக விரைவில் அமைச்சரூடாக அனைத்து அபிவிருத்திகளையும் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய மக்கள் கூட்டத்தைக்கொண்ட இப்பிரதேசத்தை பிரதேச சபை பாரபட்சம் காட்டி எதுவித அபிவிருத்தியையும் செய்யாது தடுத்து வருவதனால் மழைகாலத்தில் பாடசாலை செல்லும் மாணவர்கள் கூட இங்குள்ள வீதிகளூடாக செல்லமுடியாதுள்ளது. தற்போது இந்தப் பகுதிக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வருகை மூலம் ஒரு தீர்வு வருமென மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் ஒருங்கிணைப்பாளர் ஜெகனுடன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருக்குமரன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பகுதி மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ரயிலின் முன்னால் பாய்ந்து மாணவி மரணம்

ராகம - வல்பொல பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் ஓடும் ரயிலின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்ட ரயிலில் மோதியே மாணவி உயிரிழந்துள்ளார்.

ஜா-எல பிரதேச பாடசாலை ஒன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவியே தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

சடலம் கம்பஹா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. தற்கொலைக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை.

### விவசாய...

விடாப்பிடியாக இருக்கின்றனர். சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் அவர்களது கருத்தையே பிரதிபலிக்கின்றனர்.

இலங்கைக்கே உரித்தான 3000 இற்கும் மேற்பட்ட நெல் ரகங்களில் இன்று இருப்பது 75 வரையில் மட்டுமே.

விதைகளை உருவாக்கி விற்கும் பல்தேசிய கம்பனிகளுக்கு முழுமையான ஆதிக்கத்தைக் கொடுப்பது தான் இந்தச் சட்டத்தின் நோக்கம் என்று அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன கூறினார்.

எமது நாட்டில் 3000 இற்கும் மேற்பட்ட நெல்வகைகள் ஒரு காலத்தில் இருந்தன. ஆனால் இன்று 75 வரைதான் இருக்கின்றன. எமது பாப்பாளிப் பழம், தக்காளி, மிளகாய் ரகங்கள் எல்லாம் இன்று காணாமல்போய்விட்டன. இன்று எங்களிடம் இருப்பது வெளிநாட்டு பல்தேசிய கம்பனிகள் வழங்கிய விதை ரகங்கள் தான். அவற்றிலிருந்து இரண்டாவது தலைமுறை விதைகளைப் பெறமுடியாது என்றார் நாமல் கருணாரத்ன.

விதைகளை உருவாக்கவும் வைத்திருக்கவும் கொண்டுசெல்லவும் விவசாய திணைக்களத்தின் அனுமதி பெற வேண்டும் இல்லாவிட்டால் 6 மாத சிறைத் தண்டனையோ அல்லது 50 ஆயிரம் ரூபா அபராதமோ விவசாயிகளுக்கு விதிக்கப்படலாம் என்கின்ற புதிய சட்டப்பிரிவே விவசாயிகள் மத்தியில் கிளம்பியுள்ள பெரும் எதிர்ப்புக்கு முக்கிய காரணம்.

ஆனால், இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவருவதன் பின்னணி தொடர்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு சந்தேகம் இருப்பதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதியத்தின் இயக்குநர் எஸ். விஸ்வலிங்கம் தமிழோசையிடம் கூறினார்.

விதை விநியோகத்தில் தனியார் நிறுவனங்களுக்கு இருக்கின்ற ஆதிக்கத்தைத் தடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசிடம் உரிய நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாயத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி பி.சிவராஜா தெரிவித்தார்.

### பிரதேச...

இதனால் பிரதேச சபையின் இவ்வருட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல், நிதியும் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

இந்தப் பிரதேச சபையில் 16 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும், 5 ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### கெற்பேலியில்...

சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது வீட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளை கைப்பற்றியுள்ளனர். அத்துடன் வீட்டிலிருந்த இளைஞரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர் மேலும் இந்த இளைஞரை விசாரணை செய்யக் கொழும்பிலிருந்து விசேட படைப் பிரிவினர் வருகை தரவுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

### நாடாளுமன்றில்...

மற்றும் தெனியாய ஆகிய பிரதேசங்களுக்கு பயணிக்கவிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

மேற்படி பிரதேசங்களுக்குச் செல்லும் இவர்கள் அங்கு சிநேகபூர்வமாக விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தனர்.

### காலாவதியான...

வாங்கி உண்பதால் அவை நஞ்சாகி சிறுவர்களுக்கு நோயினை ஏற்படுத்துகின்றன.

எனவே நுகர்வோர் பொருட்களை கொள்வனவு செய்யும் போது உற்பத்தி திகதி மற்றும் காலாவதி திகதி என்பவற்றினை பார்த்து கொள்வனவு செய்யுமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (25)

## மாகாண சபை உறுப்பினர்களுக்கு விசேட செயலமர்வு

வடமாகாணசபை உறுப்பினர்களுக்கான நியதிச்சட்டம் தொடர்பான செயலமர்வு ஒன்று யாழ். நூல் நிலையத்தில் அமைந்துள்ள வடமாகாண சபையின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நேற்று மு.ப. 10.00 மணி முதல் நண்பகல் 11.55 மணி வரை நடைபெற்ற இந்தச் செயலமர்வு வடமாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை அரசியல் யாப்பு கற்கைகள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் வளவாளராக கலந்து கொண்ட ஜயம்பதி விக்கிரமரட்ணவினால் விளக்கவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைசசர்கள், உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் முதலானவர்கள் கலந்துகொண்டனர். (பா,25)

## யாழ். சாலை ஊழியர்களுக்கு இன்று சம்பளம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை யாழ். சாலையில் கடந்த காலங்களில் பாரிய குறைபாடாக இருந்துவந்த ஊழியர்களுக்கான ஊதியக் கொடுப்பனவு வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தவர்களின் பாரிய முயற்சியினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கடந்த ஏப்ரல் மாதம் வழங்கப்பட்ட 4 மில்லியன் ரூபா கடன் உதவியினாலும், அமைச்சரால் யாழ். மத்திய பேருந்து நிலையம், யாழ். சாலையின் கட்டுப்பாட்டின் கீழ் கையளிக்கப்பட்டதன் காரணத்தினால் ஏற்பட்ட வருமான உயர்வினாலும், ஊழியர்களது அயராத அர்ப்பணிப்புடன்கூடிய சேவையினாலும் ஊழியர்களுக்கான மாதாந்த வேதனம் கடந்த மே மாதம் வழங்கப்பட்டதைப் போன்று இம்மாதத்துக்கான சம்பளம் இன்று வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாக்கு எண்ணும் இயந்திரம் மொறட்டுவ பல்கலைக்கழகம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தேர்தல் ஒன்றின் வாக்கெடுப்பு முடிந்து வாக்கு எண்ணும் பணிகளை இலகுவாக்குவதற்கு வசதியாக இயந்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து தயாரித்துள்ள இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி எந்தத் தேர்தலாக இருந்தாலும் அரை மணி நேரத்தில் முடிவுகளை அறிவித்து விட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தாது தேர்தல் ஆணையாளர் பெரும் தொகைப பணத்தை விரயமாக்கி வருகிறார் என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் இதற்கு பதிலளித்துள்ள தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, அப்படியான இயந்திரம் ஒன்று இருப்பதை தான் அறிந்திருக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

அத்துடன் நடைமுறையில் உள்ள தேர்தல் சட்டத்தின்படி அப்படியான இயந்திரங்களை பயன்படுத்த முடியாது.

நடைமுறையில் உள்ள வாக்கு எண்ணும் முறையில் மாற்றங்களை செய்ய வேண்டுமாயின் அதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா. விசாரணைக்குழு விபரம் அடுத்த வாரம் வெளிவரும்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான 26 ஆவது அமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த அமர்வுகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமர்வின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இலங்கை மீது விசாரணை செய்வதற்கான குழு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின்னதாக அமைக்கப்படவுள்ளது.

இதன்படி மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மூவர் அடங்கிய குழுவை நியமிக்கவுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விசாரணைக்கான குழு இலங்கைக்குள் காலடி எடுத்து வைக்க அனுமதிக்கப்பட மாட்டாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வெளிநாடுகளில் இருந்தவாறே குறித்த விசாரணைக்குழு தமது ஆதாரங்களை திரட்டும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஜனாதிபதி...

மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் விசாரணை காத்தான்குடியில் இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை ஆரையம்பதி பிரதேச செயலக மண்டபத்திலும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமர்வில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக முறைப்பாடு செய்தவர்களுக்கு ஆணைக்குழுவினால் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அதற்கமைய நேற்று 59 பேரும், இன்று 53 பேரும் நாளை 54 மற்றும் திங்கட்கிழமை 30 பேரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் நேற்று வரையில் 45 பேர் தொடர்பான முறைபபாடுகள் விசாரணை செய்யப்பட்டுள்ளன.


நேற்றைய விசாரணைகளின் போது குருக்கள்மடத்தில் 1990 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பிலே விசாரிக்கப்பட்டது.

# இருபாலையில் வெள்ளோட்ட விழா

(இருபாலை)

வேளாதோப்பு ஸ்ரீ பாலசுப்பிரமணிய தேவஸ்தானம் கோயில் மஞ்ச வெள்ளோட்டத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் ஈ.பி.டி.பி. யின் வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசாவும் நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர பராமாச்சார்ய சுவாமி ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

112 வருடப் பழைமை வாய்ந்த இக் கோவிலினைப் புனரமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உதவிகள் வழங்கியுள்ளார் என்பதும், மஞ்ச வெள்ளோட்டத்திற்கான வடக்கயிற்றினையும் அவரே வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# விஞ்ஞான தொழில்நுட்ப கற்கைக்கு அதிக மாணவர்களை ஈர்க்க முயற்சி

பாடசாலைகளில் தொழில்நுட்ப விஞ்ஞானத்தை கற்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான தொழில்நுட்ப பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கென 2016 ஆம் ஆண்டில் 1500 மாணவர்கள் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுவரென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

'Future - 2014' தேசிய கல்வி தொழில் வழிகாட்டல் கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளவில். நேற்று முற்பகல் 9.00மணிக்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இங்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தொடர்ந்து உரையாற்றுகையில் நாட்டில் மூடப்பட்டிருந்த சுமார் 500 பாடசாலைகள் மஹிந்த சிந்தனை தேசிய வேலைத்திட்டங்கள் அடிப்படையில் மீண்டும் திறந்து வைக்கப்பட்டன. பாடசாலை செல்லும் மாணவர்களின் வயதெல்லையை 16 வரை அதிகரித்தோம். விஞ்ஞான பிரிவு இன்மையால் கல்வி கற்காத பாடசாலைகளுக்கு விஞ்ஞான பிரிவுகளை ஏற்படுத்திக் கொடுத்தோம். சுதந்திரக் கல்விக்காக அதிக பணத்தை செலவிட்டது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமேயாகும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

"எவரையும் கைவிடோம்" என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கண்காட்சியானது, மாணவர்களுக்கு சிறந்த முறையில் உயர் கல்வியை கற்க விரும்பும் மாணவர்களுக்கு அவ்வாறான உயர்கல்வி நிலையங்களை அறிமுகஞ்செய்து கொடுக்கும். அவ்வாறே சிறந்த தொழில் வாய்ப்புக்களை பெற விரும்பும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டும் நல்லதொரு வாய்ப்பாக அமையும்.

# முஸ்லிம் காங்கிரஸ் மாநாடு தலைநகரில் தடல்புடல்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 25 ஆவது பேராளர் மாநாடு கொழும்பில் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில், முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இந்தப் பேராளர் மாநாட்டில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 1200 பேராளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹஸனலி தெரிவித்தார்.

மாநாட்டில், இன்றைய முக்கிய அரசியல் சூழ்நிலை, முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பேரினவாத, இனவாத நெருக்கடிகள் தொடர்பில் தலைவர் ரவூப் ஹக்கீம் முக்கிய உரையாற்றுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநாட்டின்போது புதிய செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

## நிர்வாகத்தெரிவு

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. தலைவராக ம.சின்னத்துரை, செயலாளராக சு.அருணாச்சலம், பொருளாளராக மு.உதயகுமார ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# சுங்கம் கைப்பற்றிய எத்தனோல் எங்கே?

## ஜே.வி.பி. உறுப்பினர் போர்க்கொடி

(கொழும்பு)

சுங்கத் திணைக்களம் கடந்த வருடம் கைப்பற்றிய சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான எத்தனோலை குறைந்த விலைக்கு கேள்வி மனுக்கோரல் மூலம் விற்பனை செய்ய தயாராகி வருவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் இருக்கும் நிலையில், எத்தனோலை திருட்டு வழியில் விற்பனை செய்ய தயாராகி வருகின்றனர்.

ஒரு லீட்டர் எத்தனோலை 103 ரூபாவுக்கு விற்பனை செய்ய உள்ளனர். சாதாரணமாக எத்தனோல் லீட்டர் ஒன்றின் சந்தை விலை 2 ஆயிரம் ரூபாவாகும்.

திருட்டு வழியில் இந்த கேள்வி மனுவை வயம்ப டிஸ்டீல்ஸ் நிறுவனம் பெற உள்ளதாகவும் அந்த நிறுவனம் இலங்கையின் முக்கிய அமைச்சர் ஒருவருக்கு சொந்தமானது எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

வயம்ப டிஸ்டீல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ என்பது குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவில் கடை உடைத்து திருட்டு

பொலிகண்டி மேற்கு ஊறணி இந்து மயானத்தருகிலுள்ள கடை ஒன்றில் நள்ளிரவு வேளை பின் கதவை உடைத்து சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் உள்ளிட்ட ஏனையபொருட்களும் 30 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் இனம்தெரியாதோரால் திருடிச்செல்லப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடற்கரையோர வீதியில் அமைந்துள்ள எ.செந்தூரன் என்பவரது கடையிலே நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி உரிமையாளர் தனது ஜீவனோபாயத்துக்காக நடாத்திவந்த கடையில் சம்பவ தினத்தன்று வழமை போன்று பூட்டிவிட்டு வீடு திரும்பி நேற்றுக்காலையில் வந்து திறந்த போது பின் கதவு உடைக்கப்பட்ட நிலையில் மேசை அலுமாரியிலிருந்த 30 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அரிசி, மா, சீனி, பிஸ்கட் வகைகள், பால்மா, உள்ளிட்ட உலருணவுப்பொருட்களுடன் சிகரட், பீடி, கற்பூரம், சாம்பிராணி, போன்ற பொருட்களுமாக இனந்தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதை அறிய முடிந்தது. இருப்பினும் இச்சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருட்டு நடைபெற்றபகுதியில் இரவு வேளைகளிலும் இராணுவம் மற்றும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கடற்தொழிலாளர்களும் வெள்ளிக்கிழமையாகையால் தொழிலுக்குச் செல்லாத இத்தருணத்திலும் இவ் திருட்டுச்சம்பவம் இனந்தெரியாதோரால் இடம்பெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும். (116)

# விமானப்படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் திருப்பலி



விமானப்படையில் பணியில் இருக்கும்போது உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் திருப்பலியொன்று நேற்று முன்தினம் திம்பிரிகஸ்யாய புனித திரேஸா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

விமானப்படை தளபதி எயார் மார்ஸல் கோலித்த குணதிலக்க கலந்துகொண்ட இத் திருப்பலியின்போது விமானப் படை கொடிகளை ஏந்திய படையினர் திருப்பீடத்தை நோக்கி பேரணியாக சென்று ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இத்திருப்பலியின் போது உயிர்நீத்த அனைத்து விமானப் படை வீரர்களின் பெயர்களும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் திருப்பலியில் விமானப்படை வீரர்களும் கலந்துகொண்டனர்.

# குருநகர் யுவதி மரணம்; வழக்கில் புதிய திருப்பம்

## தொலைபேசி அழைப்பு விபரம் கோருகிறது நீதிமன்றம்

யாழ்.பெரிய கோவிலுக்கு பின்புறத்தில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட ஜெரோம் கொன்சலிற்றாவின் கையடக்கத்தொலைபேசியின் அழைப்பு விபரங்களை திரட்டுமாறு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொன்சலிற்றாவின் மரணம் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது கொன்சலிற்றாவின் மரணத்துடன் சந்தேகிக்கப்படும் இரு பாதிரியார்கள் நேற்று மன்றிற்கு சமுகமளிக்கவில்லை. (25)

# கம்பளையில் இரு சடலங்கள் மீட்பு

கம்பளை, மரியாவத்தை பகுதியில் நேற்றுக்காலை இளம தாயொருவரின் சடலம் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ள அதேவேளை, அதே பிரதேசத்திலிருந்து இளைஞன் ஒருவருடைய சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

குருணாகல் பகுதியை சேர்ந்த சம்பிகா நிலந்தி (வயது - 23) மற்றும் பொலன்னறுவை திம்புன்ததுவ பகுதியை சேர்ந்த வசந்த குமார திசாநாயக்க ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் கம்பளை, மரியாவத்தை பிரதேச வீடொன்றில் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்ததாகவும், குறித்த பெண் ஏற்கனவே வேறு ஒருவரை திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளின் தாய் எனவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்விருவரும், கம்பளை வைத்தியசாலையில் நோயாளிகளை வாடகைக் கட்டண அடிப்படையில் கவனித்துக்கொள்ளும் பணியில் ஈடுபட்டு வந்துள்ள நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கம்பளை போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள குறுக்குப் பாதையில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இப்பெண்ணின் உடலில் பல இடங்களிலும் கத்தியினால் வெட்டப்பட்ட காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இப்பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட இடத்தில் இருந்து இருநூறு மீற்றர் தூரத்திலிருந்தே குறித்த ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும், துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்திறனும் மிக்க இருபாலரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு,**
**இல. 373,பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.